# உதயன்

சுடர் : 36 | கதிர் : 198 | சனிக்கிழமை | வைகாசி 29 ஆம் நாள் 12 ஜூன் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 16 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111


## 20 ரூபாவால் எகிறியது பெற்றோல்!

கொழும்பு, ஜூன் 12

எரிபொருள்களின் விலையை அரசு நேற்று நள்ளிரவு தொடக் கம் அதிகரித்துள்ளது என்று 15

# நிலைமை கவலைக்கிடம்!

# பயணத்தடை 21 வரை நீடிப்பு

## இராணுவத்தளபதி அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 12

நாட்டில் கொரோனாத் தொற்று வேகமெடுத்து நிலைமை மோசமடைவதால், தற்போது நடைமுறையில் உள்ள பயணத்தடையை எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 4 மணிவரை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கொவிட்-19 தடுப்பு செயற்பாட்டு மையத்தின் பிரதானியும், இராணுவத் தளபதியு மான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். 15



## 72 பேருக்கு வடக்கில் கொரோனா

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில் மாத்திரம் 822 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட் 15

## 2,759 பேருக்கு நேற்று தொற்று

கொழும்பு, ஜூன் 12

இலங்கையில் நேற்று 2 ஆயிரத்து 759 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள் ளனர் என்று அரச தகவல் 15

## பனையால் வீழ்ந்தவர் இறந்தார்

மன்னார், ஜூன் 12

பனையிலிருந்து வீழ்ந்து காயப்பட்டிருந்தநபர், சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரி விக்கப்பட்டது. தலைமன்னார் பகுதியைச் சேர்ந்த தில்லைவனம் கறுப் 15

யாழ்.போதனா மருத்துவமனை

## கொரோனா நோயாளர்களில் 20 வீதமானோர் கர்ப்பிணிகள்

### மருத்துவமனை பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

யாழ்ப்பாணம் போதனா மருத் துவமனையில் சிகிச்சைபெறும் கொரோனா நோயாளர்களில் 20 வீதமானோர் கர்ப்பிணித் தாய்மார் கள் என்று பிரதிப் பணிப்பாளர் சி.யமுனாநந்தா தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது: 15

## உள்ளூர் பி.சி.ஆர். மாதிரிகளின் சோதனை போதனாவில் நிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூன் 12

வெளிநாடுகளிலிருந்து திரும்பியவர்களின் பி.சி. ஆர். மாதிரிகள் ஆயிரத்து 800 யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு திடீரென நேற்று அனுப்பிவைக்கப்பட்டமையால் உள்ளூர் மாதிரி களின் பரிசோதனை இரண்டு தினங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட் டுள்ளது. யாழ்ப்பாணம் போதனா மருத் துவமனையில் இன்றும், நாளையும் 13

படையினரின் மோ.சைக்கிளுடன்

## விபத்தில் காயப்பட்டவர் சாவு

யாழ்ப்பாணம், ஜூன் 12

இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் விபத்தில் காயம டைந்த நிலையில், சிகிச்சை பெற்றுவந்த நபர் சிகிச்சை பயனளிக் 15

## இந்தியாவுடைய ஆளுமையை நிலைநிறுத்த தமிழீழமே வழி

### நரேந்திர மோடிக்கு வை.கோ. கடிதம்

(விரிவு பக்:16)



வெளிநாடு செல்லும் நோக்கில்

## தமிழகத்துக்குள் நுழைந்த இலங்கையர் 38 பேர் கைது

கொழும்பு, ஜூன் 12

இலங்கையில் இருந்து கடல் வழியாக தமிழகத்துக்குள் ஊடுரு வியிருந்து வெளிநாடுகளுக்கு தப்பிச் செல்ல முயன்றனர் என்ற குற்றச்சாட்டில் இலங்கையர்கள் 38 பேரை கியூ பிரிவு பொலி ஸார் ஆந்திர மாநிலத்தின் மங்களூரில் நேற்று மாலை கைதுசெய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. 15

## 23 நாள்களில் 1,000 சாவுகள்

கொழும்பு, ஜூன் 12

இலங்கையில் கொரோனாத் தொற்றால் 23 நாள்களில் ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். கொரோனாத் தொற்றுத் தொடர்பான புள்ளிவிபரத் தகவல்க 13

## வீதியால் சென்ற யுவதியின் சங்கிலி அறுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 12

வீதியால் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலி மோட்டார் சைக் கிளில் வந்தவர்களால் அறுத்துச் செல்லப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம், வட் 15

## ஐரோப்பிய ஒன்றிய தீர்மானத்தை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை

### இப்படிச் சொல்கிறார் வெளிவிவகார அமைச்சர்

கொழும்பு, ஜூன் 12

ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்தில் நிறை வேற்றப்பட் டுள்ள விடயத்தை நிவர்த்திசெய்யும் நடவடிக் கையில் இலங்கை ஏற்கனவே ஈடுபட்டுள்ளது. 13


உதயன்

செய்திகளுக்கு 021 493 0000 077 1209994

விளம்பரங்களுக்கு 021 493 1111 071 6182182


Digitized by Noolaham Foundation.

# தேவைப்பட்டால் தடுப்பூசியின் மூன்றாவது 'டோஸையும்' பெற்றுக்கொள்ளுங்கள்

## அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்பு



**கொழும்பு, ஜுன் 12**

**உலகில் பல நாடுகள் தமது மக்களுக்கு தேவைப்பட்டால் மூன்றாவது டோஸையும் ஏற்றுவதற்கு உரிய வகையில் தடுப்பூசிகளைக் கொள்வனவுசெய்துள்ளன. அதேபோன்று இலங்கையும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.**

கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுகாதாரப் பரிந்துரைகளின்படி, உலகளாவிய சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, தடுப்பூசி ஏற்றுவதில் மூன்றாவது டோஸ் தேவைப்படுமாக இருந்தால், அதனை இப்போதே பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

உலகின் பல முன்னணி நாடுகள் மூன்றாவது டோஸுக்கான தடுப்பூசிகளை தற்போது கொள்வனவுசெய்ய ஆரம்பித்துள்ளன. இலங்கையும் இது குறித்து விசேட கவனம் செலுத்தி மூன்றாவது டோஸ் வழங்குவதற்கான அவசியத்தை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

உலகெங்கிலும் தடுப்பூசிகளுக்கு பெரும் கேள்வி உள்ளது. இந்தப் போட்டி சூழ்நிலையில், இலங்கைக்கு அதிகளவு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள பல நாடுகளின் தலைவர்களுடன் கலந்துரையாடி உதவி கோரப்பட்டுள்ளது என ஜனாதிபதி தெரிவித்தார். அந்தவகையில், மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தடுப்பூசிகளை வெளிப்படைத்தன்மையுடனும் முறையாகவும் வழங்க வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தினார்.

### 60 வயதுக்கு மேற்பட்டோர்

தற்போது அதிகளவு தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில், 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும், தொற்றாளர்களுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணியவர்களாக அடையாளம் காணப்பட்டவர்களுக்கும் தடுப்பூசி ஏற்ற வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். அதே நேரம், தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

அதிகளவானவர்களுக்குத் தடுப்பூசி ஏற்றுவதன் மூலம் கொவிட் நோய்த்தொற்று பரவுவதையும், மக்கள் நோய்த்தொற்றுக்கு உள்ளாவதையும் தடுக்க முடியும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

முறையான தடுப்பூசி ஏற்றல் மற்றும் தடுப்பூசி ஏற்றிக்கொள்வோர் பற்றிய தரவுகளை சேகரிப்பதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவர் நிறுவனம் விசேட மென்பொருளை உருவாக்கியுள்ளது. இதன் மூலம் கிராம அலுவலர் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மட்டத்தில் தடுப்பூசி பெற்றுக்கொள்வதற்கு திகதி மற்றும் நேரத்தை இலகுவாக ஒதுக்கிக்கொள்ள முடியும்.

தற்போது தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்கள் மற்றும் எதிர்காலத்தில் தடுப்பூசி ஏற்றிக்கொள்ள இருக்கின்றவர்கள் அனைவரையும் பற்றிய தகவல்களை உள்ளடக்கவும், தடுப்பூசி தொடர்பில் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசி சான்றிதழை வழங்கவும் அரசு எதிர்பார்க்கின்றது.

கொவிட் தொற்று அல்லாமல் உயிரிழப்பவர்களுக்கான இறுதிக் கிரியைகளும், பி.சி.ஆர். பரிசோதனைகளின் காரணமாகத் தாமதப்படுகின்றன என்று பல்வேறு குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. இதைக் கருத்திற்கொண்டு, வேறு காரணங்களால் இறந்தவர்களின் இறுதிச் சடங்குகளை 24 மணி நேரத்துக்குள் நடத்த நடவடிக்கை எடுக்க இந்தக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டுள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ.இ)



## காயப்பட்டிருந்த யானை சாவு

கொழும்பு, ஜுன் 12

வவுனியா - கனகராயன் குளம், புத்தூர் காட்டுப் பகுதியில் காயமடைந்த நிலையில், ஒரு மாதமாக சிகிச்சை பெற்றுவந்த யானை நேற்று உயிரிழந்துள்ளது.

வவுனியா நகரிலிருந்து சுமார் 25 கிலோமீற்றர் தூரத்தி லுள்ள புத்தூர் காட்டுப் பகுதியில் காயங்களுக்குள்ளான தந்தமுள்ள யானை, ஒரு மாதத்துக்கு முன்னர் கண்டறியப்பட்டது.

இந்த யானையின் கால் பகுதியில் காயங்கள் காணப்பட்டன. வவுனியா வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கிளிநொச்சி, அநுராதபுரம் கால்நடை வைத்திய அதிகாரிகள் இணைந்து யானைக்கு ஒரு மாதமாக சிகிச்சையளித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-இ)

# வாழ்நாள் முழுவதும் தடுப்பூசி பயன்தராது

## பேராசிரியர் அர்ஜுன தெரிவிப்பு

கொழும்பு, ஜுன் 12

தற்போது பயன்பாட்டிலுள்ள எந்தவொரு கொரோனாத் தடுப்பூசியும் வாழ்நாள் முழுவதும் எதிர்ப்பு சக்தியை வழங்கும் என்று நம்பிக்கைகொள்ள முடியாது என்று பேராசிரியர் அர்ஜுன டி சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

உலகளாவிய ரீதியில் பல நாடுகள் கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசிகளை உருவாக்கியுள்ளன. சில நாடுகள் உலக சுகாதார அமைப்பின் அனுமதியைப் பெறாமலேயே பொதுமக்களுக்கு தடுப்பூசிகளைச் செலுத்தியுள்ளன.

இலங்கையில் சைனோஃபோர்ம் மற்றும் அஸ்ராஜெனகா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டு வருகின்றன. இவை வாழ்நாள் முழுவதும் பயனளிக்கும் என்று கூற முடியாது - என்றார்.(எ-4)

# ரஷ்யத் தடுப்பூசிகள் 65,000 கிடைத்தன

கொழும்பு, ஜுன் 12

ரஷ்யாவின் ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளின் ஒரு தொகுதி, நேற்று அதிகாலை நாட்டை வந்தடைந்துள்ளன என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

65 ஆயிரம் தடுப்பூசிகள் இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றில் 15 ஆயிரம் தடுப்பூசிகள் முதலாம் டோஸ் செலுத்தியவர்களுக்கு, இரண்டாம் டோஸ் செலுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏனைய 50 ஆயிரம் தடுப்பூசிகளும் கண்டி மாவட்ட மக்களுக்கு முதலாவது டோஸாக ஏற்றப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மே மாதம் 4ஆம் திகதி 15 ஆயிரம் தடுப்பூசிகளும், மே மாதம் 27ஆம் திகதி 50 ஆயிரம் தடுப்பூசிகளும் ரஷ்யாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (எ,ஒ,4,5)

# சி.ஐ.டி.பிரதிப் பணிப்பாளராக முதன்முறையாக பெண் பொலிஸ்

கொழும்பு, ஜுன் 12

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் பதவிக்கு முதன்முறையாக பெண் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலரின் அனுமதியுடன் மகளிர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முதுமால குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.



இவர், 2007ஆம் ஆண்டு பயிற்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக இணைந்துகொண்டவர் - என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-இ)

# தடுப்பூசி இறக்குமதிக்கு ரூ.77 பில்லியன் தேவை

கொழும்பு, ஜுன் 12

இலங்கைக்கு கொரோனாத் தடுப்பூசி இறக்குமதிக்காக, 77 பில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது என்று அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

ஐரோப்பா மற்றும் அமெரிக்கா என்பன 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கான கொரோனாத் தடுப்பூசிக்கான முற்பதிவுகளை தற்போதே முன்னெடுத்து வருகின்றன.

அத்துடன் கொரோனாத் தடுப்பூசிகளில் பல டோஸ்கள் செலுத்தப்பட வேண்டும் என்று அந்த நாடுகள் நம்புகின்றன. இந்த நிலையில் இந்த வருடம் தடுப்பூசி இறக்குமதிக்கு இலங்கைக்கு 77 பில்லியன் ரூபா நிதி தேவைப்படுகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து

# மருத்துவமனைகளின் பணியாளர்கள் நாடு முழுவதும் நேற்றுப் போராட்டம்

## வடக்கிலும் கவனவீர்ப்பு



கிளிநொச்சி



யாழ்ப்பாணம்

**யாழ்ப்பாணம், ஜூன் 12**

**சுகாதாரத் திணைக்கள மருத்துவமனைகளில் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகள் தவிர்ந்த ஏனைய தரங்களில் பணியாற்றும் பணியாளர்கள் 15 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி நாடு முழுவதும், நேற்று அடையாளப் பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டனர்.**



மன்னார்

கடந்த 3ஆம் திகதி தங்களால் மேற்கொள்ளப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கையின் போது முன்வைத்த கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை, சுகாதார அமைச்சுக்கு தாங்கள் முன்வைத்த கோரிக்கைகளான கொவிட்19 தொற்று நோய் தொடர்பான முடிவெடுத்தலில் ஒருங்கிணைந்த தொழிற்சங்க குழுவையும் இணைத்தல், மருத்துவமனைப் பணிக்குழுவினருக்கு தங்கு தடையின்றி போதிய அளவு சுய பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும், மருத்துவமனையில் உள்ள கொவிட்-19 கட்டுப்பாட்டுக் குழுவில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளையும் இணைத்துகொள்ள வேண்டும், பொது நிர்வாக அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைய சுகாதாரத் துறைசார்ந்த கர்ப்பிணி ஊழியர்களுக்கு விசேட விடுமுறைக்கான சுற்றறிக்கை வெளியிடப்பட வேண்டும் உள்ளிட்ட பயணத் தடைக் காலத்தில் சுகாதாரத் துறை சார் பணிக்குழுவினருக்கு விசேட போக்குவரத்து வசதி ஏற்படுத்திக் கொடுக்கபப்படவேண் டும். அனைத்து பணிக்குழு வெற்றிடங்களையும் நிரப்ப வேண்டும் மற்றும் கொவிட் தடுப்பூசி இதுவரை ஏற்றாத பணிகுழுவினருக்கு உடனடியாக தடுபூசியை ஏற்ற வேண்டும் ஆகியவை 15 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே அந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா ஜனரஜ சுகாதார சேவையாளர் சங்கம், அரச குடும்ப நல சேவையாளர் சங்கம், அரச தாதியர் சங்கம், மேல் மாகாண சுகாதார சேவைகள் சாரதிகள் சங்கம். துணை மருத்துவ சேவை ஒருங்கிணைந்த அதிகாரசபை, துணை மருத்துவ சேவை ஒருங்கிணைந்த முன்னணி, அரசு சுகாதார முகாமைத்துவ உதவியாளர்களின் சங்கம், மற்றும் அரசு தொழில்நுட்பவியலாளர்கள் சங்கம் ஆகிய எட்டு தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து பணிப் புறக்கணிப்புக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருந்தன.

இதன் பிரகாரம் வடக்கு மாகாணத்திலும், உள்ள மருத்துவமனைகளில் மருத்துவமனைப் பணியாளர்களும் போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்தப் போராட்டத்தால் மருத்துவமனைக்கு வந்த நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர். (ப 9)



முல்லைத்தீவு



வவுனியா

# இலவசக்கல்வியை வியாபாரமாக்கும் அரசு

## சு.க. கண்டனம்

கொழும்பு.ஜூன் 12

இலவசக்கல்வியை தனியார் மயப்படுத்தி, சுதந்திரத்துக்கு முன்னர் இருந்த நிலைமையை ஏற்படுத்த அரசு சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளதா என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரான பேராசிரியர் ரோஹண லக்ஸ்மன் பியதாஸ தெரிவிக்கையில்,

கல்வியில் ஆங்கில மொழிக்கு முதன்மை இடத்தை வழங்க அரசு முயற்சிப்பதால் விபரீத நிலைமையே ஏற்படும். நாடு சுதந்திரம் பெற்ற காலப்பகுதிக்குப் பின்னர் சிங்களம் மற்றும் தமிழ் மொழிக்குள்ள முதன்மை இடத்தை தற்போதைய அரசு மாற்றியமைக்க முயற்சி செய்கின்றது.

சுதந்திரத்துக்குப் பின்னர் பாடசாலைகள் அரசால் எடுக்கப்பட்டதன் பின்னர் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இலவசக் கல்வி முறை மேலும் விரிவாக்கப்பட்டது. ஆனால் தற்போது தனியார் கல்வி முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கல்வி விற்பனை செய்யப்படுகின்றது. அனைத்து நாடுகளிலும் தாய்மொழியே அடிப்படை மொழிமூலமாகக் கொள்ள வேண்டும் என்ற யுனெஸ்கோ நிறுவனத்தின் கொள்கைக்கு எதிராக தற்போதைய அரசிலுள்ளவர்கள் சூழ்ச்சிசெய்து கல்வி முறையை மாற்றியமைக்கின்றனர். இதனால் கிராமப்புறங்களிலுள்ள மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்துக்குச் செல்ல முடியாத நிலைமையே ஏற்படும்- என்றார். (4)

# ஆங்கிலமொழி மூலக் கல்வி முதலாம் தரத்தில் அவசியமா?

## முன்னாள் கல்வி அமைச்சர் பந்துல எதிர்ப்பு

கொழும்பு, ஜூன் 12

பாடசாலை மாணவர்களுக்கு முதலாம் தரத்தில் ஆங்கிலம் மூலம் கல்வியை வழங்கும் பிரேரணைக்கு அமைச்சர் பந்துல குணவர்தன எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் என்ற வகையில், இந்த முறைமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றேன்.

யுனிசெப் சிறுவர்களுக்காக முழு உலகமும் அங்கீகரித்த அமைப்பு. அந்த அமைப்பு தமது தாய்மொழியிலேயே அடிப்படைக்கல்வியை வழங்க வேண்டும் என்ற கொள்கையில் உள்ளது. இதற்கு அமையவே எமது அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 21 ஆவது சரத்தில் எந்த மொழியில் மாணவர்களுக்குக் கல்வியை வழங்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இலங்கையின் அரசகரும மொழிகளாக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் ஆரம்பக் கல்வியை வழங்க வேண்டும் என்று அதில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இதனால் மாணவர்கள் ஆரம்பக் கல்வியை ஆங்கிலத்தில் கற்பிக்க வேண்டுமாயின், மூன்றில் இரண்டு வாக்குப்பலத்தில் அரசமைப்புச் சட்டத்தை முதலில் மாற்ற வேண்டும்.

அத்துடன் யுனஸ்கோ போன்ற அமைப்பின் அடிப்படைக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாத நாடாக நாம் மாறிவிடுவோம்- என்றார். (எ-4)

# கற்றல் முறைமை ஓகஸ்ட்டில் மாற்றம்

கொழும்பு, ஜூன் 12

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை நெருக்கமாக இணைக்கும் புதிய கற்றல் முறைமையொன்று, எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் ஆரம்பிப்பதற்கு [illegible] என்று இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இணைய வழியூடாக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மாணவர்கள் அதேவழியில் திறனை வளர்த்துக்கொள்கிறார்களா? என்ற பிரச்சினைக்குத் தீர்வாக, புதிய முறைமை அறிமுகப்படுத்தப்படும் என்றும் அவர் தெரி வித்துள்ளார். (எ-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழருக்கு அமெரிக்காவில் பதவி

**கொழும்பு, ஜூன் 12**

**இலங்கையைச் சேர்ந்த கலாநிதி ஜோர்ஜ் ஈ. கேப்ரியல், அமெரிக்க வெள்ளை மாளிகை கூட்டுறவு தொடர்பான ஜனாதிபதி ஆணைய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.**



அமெரிக்க அதிபர் ஜோ பைடனால், வெள்ளை மாளிகை பட்டயச் சான்றிதழ் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு 22 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதில் இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட கலாநிதி ஜோர்ஜ் ஈ கேப்ரியலும் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். கலாநிதி ஜோர்ஜ் ஈ கேப்ரியல் மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தை பிறப்பிடமாகவும், பூர்வீகமாகவும் கொண்டவர். களனிப் பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பைப் பூர்த்திசெய்தவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

## சிறுவன் பியர் அருந்துவதை காணொலி எடுத்தவர் கைது

கொழும்பு, ஜூன் 12

4 வயதுச் சிறுவன் பியர் அருந்துவதை, காணொலி எடுத்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த காணொலி சமூகவலைத்தளத்தில் வெளியானதை அடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

பேலியகொட நுகே வீதியைச் சேர்ந்த சிறுவனே, காணொலியில் பதிவாகியுள்ளார். சிறுவர்களுக்கு மதுபானம், புகைத்தல் பொருள்கள் உள்ளிட்டவைற்றைப் பெற்றுக்கொடுப்பது சட்டரீதியாக தடைசெய்யப்பட்டுள்ள நிலையில், சந்தேகநபர் சிறுவனுக்கு பியர் அருந்தக் கொடுப்பதை, காணொலியாகப் பதிவுசெய்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (4)



## முதலையிடம் சிக்கியவரை துணிச்சலாக மீட்டார் பிக்கு

கொழும்பு, ஜூன் 12

குளத்தில் குளித்துக் கொண்டிருந்த முதியவர் முதலையிடம் சிக்கியதை அவதானித்த பௌத்த பிக்கு ஒருவர், முதலையுடன் சண்டையிட்டு, அவரைப் பாதுகாப்பாக மீட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் அநுராதபுரம் கஹடகஸ்டிகிலியப் பிரதேசத்தில் நடந்துள்ளது.

குறித்த பிக்கு தான் குளித்து விட்டு, குளத்திலிருந்து வெளியேறி விகாரைக்குச் செல்ல தயாராகிக் கொண்டிருந்தார். அதன்போது தன்னுடன் குளித்துக் கொண்டிருந்த வயதான நபரை குளத்தின் ஆழமான பகுதிக்கு முதலையொன்று இழுத்துச் செல்வதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

உடனடியாகக் குளத்தில் குதித்த பிக்கு, முதலையுடன் கடும் சண்டையிட்டு, முதியவரைக் காப்பாற்றியுள்ளார். காயமடைந்த முதியவர் அநுராதபுரம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ-4)

## கசிப்பு பரல் வெடித்து ஒருவர் உயிரிழப்பு



அம்பாறை, ஜூன் 12

கசிப்பு பரல் வெடித்ததில் ஒருவர் உயிரிழந்ததுடன், இன்னொருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் அம்பாறை சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வளத்தாப்பிட்டியில் நேற்று முன்தினம் நடந்துள்ளது.

வயலுக்கு நீர் செல்லும் ஓடங்கரை வாய்க்கால் கரையில் தந்தை மற்றும் மகனுடன், அவர்களின் உறவினர் ஒருவரும் கசிப்புக் காய்ச்சிக் கொண்டிருந்தனர்.

இதன்போது பரல் சிதறி வெடித்து, தீ பரவியுள்ளது. அதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

வளத்தாப்பிட்டியைச் சேர்ந்த ஏகாம்பரம் தங்கவேல் (வயது -56) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். இன்னொருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ-4)



## போதைப்பொருள் வியாபாரி கைது

கொழும்பு,ஜூன் 11

போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில், 'ஸ்டேஸ்புர கொல்ல' என்றழைக்கப்படும் நபரொருவர், மேல் மாகாண ஊழல் ஒழிப்புப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் ஸ்டேஸ்புர வீட்டில் வைத்தே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்த 31 கிராம் போதைப்பொருளை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். சந்தேகநபர் கிராண்ட்பாஸ், வெல்லம்பிட்டி, தெமட்டகொட மற்றும் பொரளை ஆகிய பிரதேசங்க ளுக்குப் போதைப்பொருளை விற்பனை செய்து வந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சந்தேகநபருக்கு எதிராக உயர் நீதிமன்றில் போதைப்பொருள் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 4 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-4)

## சஹ்ரானுடன் தொடர்பு மேலும் இருவர் கைது

கொழும்பு, ஜூன் 12

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி என்று கருதப்படும், சஹ்ரான் ஹாசீமுடன் தொடர்பிலிருந்தனர் என்ற குற்றச்சாட்டில், சந்தேகநபர்கள் இருவர் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கஹடகஸ்திகிலிய பகுதியைச் சேர்ந்த 47 வயதுடைய நபர் மற்றும் காத்தான்குடிப் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபர் ஆகியோரே கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


இவர்களில் கஹடகஸ்திகிலிய பகுதியைச் சேர்ந்த நபர், 2018 ஆம் ஆண்டு சஹ்ரான் உள்ளிட்ட ஐந்து பேருக்கு பாதுகாப்பு வழங்கியுள்ளார். அவர் துணைத்தபால் சேவகராகக் கடமையாற்றுபவர். காத்தான்குடியைச் சேர்ந்த நபர், தீவிரவாதப் பிரசாரங்களை பரப்பியுள்ளதுடன், சஹ்ரானுடன் தொடர்பு வைத்திருந்தவர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். சந்தேகநபர்கள் இருவரும் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

# இழப்பீடு சிக்கலெனில் 117க்கு அழைக்கலாம்

கொழும்பு, ஜூன் 12

அண்மையில் ஏற்பட்ட இடர்களால் பாதிக்கப்பட்டவர்கள் உயிர் மற்றும் சொத்து இழப்புக்களுக்கு இழப்பீடு பெறுவதில், ஏதேனும் சிக்கல் இருப்பின் 117 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அல்லது மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவுக்கு அழைத்து தகவல் வழங்க முடியும் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இடர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, மாவட்டச் செயலரால் இழப்பீட்டுத் தொகை தீர்மானிக்கப்படும். அந்த இழப்பீட்டுத் தொகையை வழங்குவதற்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நடவடிக்கை எடுக்கும்.



கடந்த 3 ஆம் திகதியிலிருந்து இலங்கையில் ஏற்பட்ட அனர்த்த நிலை காரணமாக 21 பேர் உயிரிழந்துள்ளனர். 10 மாவட்டங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 890 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இடரால் உயிரிழந்த ஒருவருக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், சேதமடைந்த வீடுகளுக்கு ரூபா 10 ஆயிரம் முதல் 25 லட்சம் வரையிலான இழப்பீட்டுத் தொகையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## போலித் தகவல்களும் குழப்பங்களும்


மக்களைக் குழப்பும் வகையில் தகவல்களைப் பரப்புவோரைக் கண்காணித்துக் கைதுசெய்வதற்கான அறிவிப்புக்களும், நடவடிக்கைகளும் இலங்கையில் முடுக்கி விடப்பட்டுள்ளன. இப்படி போலியான தகவல்களைப் பரப்புவோர் என்ற போர்வையில், சமூக வலைத்தளங்களில் அரசாங்கத்தை விமர்சிப்பவர்களின் கருத்துச் சுதந்திரத்தைக் கழுத்தறுக்கும் வேலையே நடக்கப்போகின்றது என பலரும் கருத்தும் வெளியிட்டிருந்தனர். மிக நீண்டகாலமாகவே சமூகவலைத்தளவாசிகள் மீது இந்த அரசாங்கத்துக்கு ஒரு கண் உண்டு. என்னதான் மிகப்பெரிய ஊடகங்களை தனது அதிகாரத்தால் அடிபணிய வைத்து, அவற்றை தனது ஊதுகுழலாக மாற்றும் வித்தை கோத்தாபய அரசாங்கத்துக்கு கைவரப்பெற்றிருந்தாலும், சமூக வலைத்தள ஊடகங்கள் மூலம் எப்படியோ உண்மைகள் கசிந்து, பரவுவது மிகப்பெரிய தலையிடியாகவே இருந்தது. எனவேதான் சந்தர்ப்பம் வாய்த்ததும், ஏதோ ஒரு வர்த்தமானியை வெளியிட்டு, அதன் மூலம் அரசாங்கத்துக்கு எதிராக கருத்து வெளியிடுவோரையெல்லாம், "போலிச்செய்தி பரப்பினார்கள்" என உள்ளேபோட்டு இன்புற முடியும். என்றுமில்லாதவகையில் ஊடக மற்றும் கருத்துச் சுதந்திரம் என்பவை சட்டங்களின் பெயர்களால் இந்த ஆட்சிக்காலத்தில் மோசமான வகையில் அடக்குமுறைக்குள்ளாக்கப்படுகின்றன.

தென்னிலங்கையில் இப்போது அதிகாரத்துக்கு சிம்ம சொப்பமாக உள்ள ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமமீது நீதிமன்ற அவமதிப்பு மற்றும் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை என இரு வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளன. பயணத் தடைக் காலத்தில் ஐந்து நட்சத்திர விடுதியொன்றில் நடைபெற்ற பிறந்ததினக் கொண்டாட்டங்களின் பின்னணியில் உள்ள அதிகார வர்க்கத்தினர் யாரென்பதை வெளிக்கொணர்ந்ததில் சமுத்திதவின் பங்கு பெரிது. அத்தோடு பயணத்தடைக் காலத்தில் அப்பாவிகளை வீதிகளில் ஓட ஓட விரட்டும் பொலிஸார், தனவந்தர்களை ( அவர்கள் முகக்கவசம் அணியாமல் செல்லும்போது கூட) மரியாதையாக நடத்தி தொடர்ந்தும் பயணிக்க அனுமதிப்பதை வீடியோ ஆதாரத்தோடு பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹணவுக்கு , நேரலை நிகழ்ச்சி ஒன்றில் காண்பித்து கிடுக்கிப்பிடி போட்டார். இப்படியெல்லாம் ஆட்சியாளர்களின் இன்னொரு முகத்தை அம்பலப்படுத்துவதால் அவர்மீது வழக்குகள் போடப்பட்டுள்ளன. இத்தனைக்கும் அவருக்கு தொடர்ச்சியாக கொலை மிரட்டல்களை அநாமதேய நபர்கள் விடுக்கத் தொடங்கியுள்ளனர். ஏதேனும் செய்து அவரது குரலை இல்லாதாக்க அதிகாரம் பலமாக முயல்கின்றது. இதுவும் ஊடக மற்றும் கருத்துச் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட இன்னொரு அச்சுறுத்தலே.

இந்தநிலையில் உண்மையில் போலிச் செய்திகளைப் பரப்புவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமானால், இலங்கை இராணுவத்தளபதி மீது தான் அந்த நடவடிக்கையை முதலில் எடுக்க வேண்டும். பயணத்தடை ஜூன் 14 ஆம் திகதி தளர்த்தப்படும் எனவும், அது தொடர்ந்து நீட்டிக்கப்படும் என்றும் பரவிய செய்தியில் உண்மையில்லை என்றும் நேற்றுமுன் தினம் இராணுவத்தளபதியும், கொரோனா தடுப்புச் செயலணியின் தலைவருமான சவேந்திர சில்வா அறிவித்திருந்தார். நேற்று மாலை வரை ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் இதுவே பேசுபொருளாக இருந்தது. 'அப்பாடா ஒருவாறு மீண்டும் வேலைக்கு போய் உழைத்து, பட்டினி நிலையைப் போக்க முடியும்' என்று நாளாந்தம் உழைத்து , சீவிக்கும் மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டனர். ஆனால் அது நேற்று மாலைவரைதான் நீடித்தது.

எந்த இராணுவத் தளபதி , 14 ஆம் திகதியோடு பயணத்தடை தளர்த்தப்படும் என்று சொன்னாரோ, அதே தளபதி 'இல்லை யில்லை, 21 ஆம் திகதிவரை பயணத்தடை நீடிக்கும்' என தடாலடியாக நேற்று விடுத்த அறிவிப்புக்கு மாறாக இன்னொரு அறிவித்தலை விடுத்தார். இதனால் மக்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது. ஜூன் 21 வரை பயணத் தடையை நீடிப்பதாக இருந்தால், அதனை முதலே சொல்லியிருக்கலாமே, எதற்காக முதல் நாள் 14 ஆம் திகதி பயணத் தடை தளர்த்தப்படும் என்று சொல்லவேண்டும்? என்பது மக்களின் கேள்வியாக உள்ளது. இப்படி போலியான தகவலை (14 ஆம் திகதி பயணத்தடை தளர்த்தப்படும் என்ற செய்தி) பரப்பி, ஒட்டுமொத்த நாட்டையும் குழப்பநிலைக்குள் தள்ளியமைக்கு இராணுவத்தளபதி மீதுதானே நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அப்படியெல்லாம் நடக்காது. ஆனால் சமுதித்த போன்ற உண்மையை வெளிக்கொண்டுவரும் ஊடகவியலாளர்கள் மீது மட்டும் வழக்குகள் பாயும். அதற்கெல்லாம் குறைவிருக்காது.

மீண்டும் பயணத்தடை நீடிப்பா, இல்லையா என்ற பாணியிலான குளறுபடியான அறிவிப்புக்கள் வரத்தான் போகின்றன, நாடும் குழப்ப நிலைக்குள்ளேயே மூழ்கத்தான் போகின்றது. குரங்கு கையில் பூமாலை இருந்தால் இப்படியெல்லாம் நடக்கத்தானே செய்யும்?




## பொலநறுவையில் சீனாவின் அன்பளிப்பில் சிறுநீரக மருத்துவமனை திறக்கப்பட்டது



**கொழும்பு, ஜூன் 12**

**பொலநறுவையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சீன - இலங்கை நட்புறவு தேசிய சிறுநீரகவியல் மருத்துவமனை நேற்று முற்பகல், ஜனாதிபதி கோத்தாபயவால் பொது மக்களிடம் கையளிக்கப்பட்டது.**

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 2015ஆம் ஆண்டில் சீனாவுக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின்போது முன்வைத்த கோரிக்கையின் பேரில், சீன அரசின் முழுமையான அன்பளிப்பாக இந்த மருத்துவமனைக் கட்டடத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சீனா மற்றும் இலங்கை நாடுகளுக்கேயுரிய பண்டையகால கட்டடக்கலை அம்சங்களுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த மருத்துவமனைக் கட்டடத்தொகுதி, 16 ஏக்கர் நிலப் பரப்பில் அமையப்பெற்றுள்ளது. இதற்காக, ஆயிரத்து 200 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன், இதன் நிர்மாணப் பணிகள் 30 மாதங்களில் நிறைவுசெய்யப்பட்டுள்ளன.

சிறுநீரக மாற்று சிகிச்சைக்கான நவீன வசதிகளுடன்கூடிய 5 சத்திர சிகிச்சைக்கூடங்களைக் கொண்டுள்ள இந்த மருத்துவமனையில், 200 நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் உள்ளன. தீவிர சிகிச்சைப்பிரிவில் 20 கட்டில்கள், குருதி சுத்திகரிப்பு இயந்திரங்கள் 100, சிறுநீரக நோய் சிகிச்சைக் கட்டடத்தொகுதி, நவீன தொழில்நுட்பத்துடன்கூடிய பரிசோதனை நிலையம், ஆய்வுகூடம், கதிரியக்க மற்றும் சிடி ஸ்கேன் சேவைகள் மற்றும் நவீன கேட்போர்கூடம் என்பவையும் இதில் அடங்கும். 300 வாகனங்களை நிறுத்தக் கூடிய வாகனத் தரிப்பிடம் மற்றும் மருத்துவமனை பணிக்குழாமைச் சேர்ந்த அனைவருக்குமான தங்குமிட வசதிகளையும் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.இ)

## முதல் தடவையாக ஒரே நாளில் கொரோனாவால் 101 பேர் உயிரிழப்பு



இலங்கையில் மேலும் 101 கொரோனா சாவுகள் நேற்றுமுன்தினம் பதிவாகியுள்ளன என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். அதன்படி, இலங்கையில் இதுவரையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 11ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாளொன்றில் வெளியிடப்பட்ட அதிகபட்ச கொரோனா உயிரிழப்புக்களின் எண்ணிக்கை இதுவென்பது குறிப்பிடத்தக்கது. ஆனாலும் இந்த உயிரிழப்புக்கள் ஒரே நாளில் நிகழவில்லை. கொரோனா உயிரிழப்பு என்று உறுதிப்படுத்திஅவை தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. (ஒ.5.22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவுப்பொதிகளில் முறைகேடு; விசாரணைகள் ஆரம்பமாகின!

## கிளி. மாவட்டச் செயலர் தெரிவிப்பு



**கிளிநொச்சி, ஜூன் 12**

**உணவுப்பொதிகளில் முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 10 ஆயிரம் பெறுமதியான உணவுப் பொதிகளில் மரக்கறிகள் இல்லை. அதிகரித்தவிலையில் பூசணிக்காய் பொதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்று பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டியிருந்த நிலையில், அது தொடர்பாக மாவட்டச் செயலாளரிடம் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

"உணவுப்பொதிகளின் குறைபாடுகள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ளோம்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு ரூபா 10 ஆயிரம் பெறுமதியான உணவுப் பொதிகள் வழங்குகின்றபோது, ஆயிரம் ரூபா பெறுமதியான மரக்கறிகள் குறித்த பொதியில் உள்ளடக்கப்பட வேண்டும். ஆனால் வழங்கப்படும் பொதிகளில் மரக்கறிகள் இல்லை என்ற குற்றச்சாட்டுகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களால் தெரிவிக்கப்படுகின்றன. கிளிநொச்சி மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கான உணவுப்பொதிகளை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்றன. இவ்வாறான நிலையிலேயே மக்களால் அந்தக் குற்றச்சாட்டு முன்வைக் கப்பட்டுள்ளது. (ப-13)



# விதிமுறை மீறிய கிரவல் அகழ்வு கிளிநொச்சியில் தொடர்கின்றது

## மக்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி, முறிகண்டி - அக்கராயன் வீதியில் நான்காம் கட்டை மற்றும் அதனை அண்டிய காடுகளில் தொடர்ந்தும் விதிமுறைகளை மீறிய கிரவல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது என பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

குறித்த பிரதேசத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் கிரவல் அகழ்வதற்கான அனுமதியைப் பெற்று கிரவல் அகழ்வில் ஈடுபட்டு வருகின்றனர். கிரவல் அகழ்வுக்கு அனுமதி வழங்கப்படுகின்றபோது உரிய திணைக் களங்களால் சில விதிமுறைகள் விதிக்கப்பட்டே அனுமதி வழங்கப்படுகின்றது. அந்த விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அனுமதி வழங்கப்படுகின்ற போது கிரவல் அகழும் நேரம், அகழப்படும் பரப்பளவு, எவ்வளவு ஆழத்துக்கு அகழப்பட வேண்டும், பெறுமதி மிக்க பெரிய காட்டு மரங்கள் அழிக்கப்படக்கூடாது, மற்றும் அளவு உள்ளிட்ட விதி முறைகள் குறிப்பி டப்பட்டே கிரவல் அகழ்வதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது. ஆனால் அனுமதியைப் பெற்றவர்கள் இதனை முறையாகப் பின்பற்றுவதில்லை.

அனுமதியை வழங்கிய திணைக்களங்கள் குறித்த விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிப்பதும் இல்லை. இந்த விதிமுறைகள் மீறப்படுவதால், காடுகள் கண்டபடி அழிக்கப்பட்டு வருகின்றன. எனவே சம்மந்தப்பட்ட திணைக்களங்கள் இது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும் - என்றனர். (ப-214)

# ஆள்களில்லா வீடுகளில் சூழ்ந்துள்ள பற்றைகளைத் துப்புரவுசெய்யுங்கள்

## முல்லை. நகர மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 12

முல்லைத்தீவு நகரத்தில் ஆள்கள் அற்ற வீடுகளைச் சூழ வளர்ந்துள்ள பற்றைகளை பிரதேச சபையின் நடைமுறைக்கேற்ப துப்புரவு செய்யுமாறு, முல்லைத்தீவு நகரத்தில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

கரைதுறைப்பற்று பிரதேச சபை அண்மையில் பற்றைகள் வளர்ந்துள்ள சூழலைத் துப்புரவு செய்யுமாறு அறிவித்தல் விடுத்துள்ளது. முல்லைத்தீவு நகரத்தில் 1990ஆம் ஆண்டில் இருந்து குடும்பங்கள் வசிக்காத பல வீடுகள் பற்றைகள் வளர்ந்து விலங்குகள் மற்றும் பாம்புகளின் உறைவிடமாகக் காணப்படுகின்றன. தற்போது வசித்துவரும் குடும்பங்களுக்கு இவை அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றன. போர், ஆழிப் பேரலை ஆகியவை முல்லைத்தீவு நகரத்தில் பல குடும்பங்களின் உயிரிழப்புகளுக்கும், இடம்பெயர்வுகளுக்கும் காரணமாக அமைந்துவிட்டன.

கடந்த 10 ஆண்டுகளில் பல வீடுகள் சேதமடைந்த நிலையில் பற்றைகளால் மூடப்பட்டுக் காணப்படுகின்றன. அபிவிருத்தி அடைந்து வரும் நகரத்தில் இவ் வீடுகள் பற்றைகளால் மூடிக் காணப்படுவது பெரும் ஆபத்தாக உள்ளது. குறித்த வீடுகளுக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் பற்றைகளைத் துப்புரவுசெய்ய வேண்டும். வீடுகளுக்கான உரிமையாளர்கள நகரத்தில் இல்லை எனில் பிரதேச சபையின் நடைமுறைகளுக்கு ஏற்ற வகையில் பற்றைகளைத் துப்புரவுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றனர். (ப-13)



# முதன்மை வீதிகளில் கால்நடைகளை மேய்ச்சலில் ஈடுபடுத்த வேண்டாம்

## பொலிஸார் கோரிக்கை



முல்லைத்தீவில் கால்நடைகள் தொடர்ச்சியாக முதன்மை வீதிக்கு வருவதால், விபத்துக்குள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன. எனவே கால்நடை வளர்ப்பாளர்கள், அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று மாங்குளம், மல்லாவி, ஒட்டுசுட்டான் மற்றும் புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்;

பயணத் தடை காலத்தில் கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை முதன்மை வீதியிலும், வீதிக்கு அருகிலும் மேய்ச்சலில் ஈடுபடுகின்றனர். தற்போது மிக அவசிய தேவைக்காக வீதிகளில் செல்லும் வாகனங்களில் சிக்கி கால்நடைகள் விபத்துக்களை எதிர்கொள்ளும் அபாயம் காணப்படுகின்றது. இதனால், கால்நடைகளை முதன்மை வீதிகளில் இருந்து, தூரத்துக்குச் சென்று மேய்ச்சலில் ஈடுபடுத்த வேண்டும். பகலில் முதன்மை வீதிகளில் நடமாடும் கால்நடைகள், இரவு வேளைகளில் வீதிகளிலேயே தங்கி நிற்பதை அவ தானிக்க முடிகின்றது. ஏ-9 வீதியிலும், பரந்தன் - முல்லைத்தீவு வீதியிலும், மாங்குளம் துணுக்காய் வீதியிலும், மாங்குளம் ஒட்டுசுட்டான் -முல்லைத்தீவு வீதியிலும் கால்நடைகள் கூடுதலாகத் தங்கி நிற்கின்றன. இதனால், விபத்து ஏற்படும்போது கால்நடைகளுக்கு மட்டுமல்ல மனித உயிருக்கும் ஆபத்து ஏற்படும். கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடைகளை முதன்மை வீதிகளில் இருந்து தூர இடங்களுக்குக் கொண்டு சென்று மேய்ச்சலில் ஈடுபடுத்த வேண்டும் -என்றனர். (ப-13)

# சட்டவிரோத மீன்பிடி; மீனவர் கைது

முல்லைத்தீவு நாயாற்று கடற்பரப்பில் ஒளிபாச்சி மீன்பிடித்த குற்றச்சாட்டில் மீனவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து படகு ஒன்றையும் கடற்படையினர் மீட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் கொக்குளாய் பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவர் நாயாற்று கடல்பகுதியில் ஒளிபாச்சி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார். இதனையடுத்து குறித்த மீனவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவர் மீது வழக்குப் பதிவுசெய்த கடற்தொழில் நீரியல் வளத் திணைக்களத்தினர் அவரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-19)

# சேதனப்பசளை விவசாயத்துக்கு கிளி. விவசாயிகளும் மாறவேண்டும்

## மாவட்டச் செயலர் கோரிக்கை

கிளிநொச்சி, ஜூன் 12

கிளிநொச்சி மாவட்டத்தில், இரசாயனப் பாவனையற்ற பயிர்ச்செய்கை மேற்கொண்டு உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இயற்கை உரங்களைப் பயன்படுத்தி, பயிர்ச்செய்கையை மேற்கொள்வது, இரசாயன உரங்களைத் தவிர்ப்பது தொடர்பான கூட்டம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தலைமையுரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்;

அரசின் கொள்கையாக உள்ள சேதனப் பசளைகளையைப் பயன்படுத்தி விவசாய உற்பத்திகளை மேற்கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை உறுதியாக நடைமுறைப்படுத்த விவசாயிகளை விழிப்பூட்டல் செயற்பாடுகளை சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் எதிர்வரும் ஆடி மாதத்துக்குள் மேற்கொள்ள வேண்டும். இயற்கை உர உற்பத்தி தற்போது வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதால், எதிர்காலத்தில் உள்நாட்டிலேயே அவற்றை உற்பத்திசெய்ய அரசு நடவடிக்கை எடுக்கும் - என்றார்.

இந்தக் கூட்டத்தில், துறைசார் திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் விவசாய பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# மெல்பேர்னில் பரவிய வைரஸ் இலங்கை ஊடாக பரவவில்லை



கொழும்பு, ஜூன் 12

ஆஸ்திரேலியா மெல்பேர்ன் நகரில் அண்மையில் டெல்மா வைரஸுடன் அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளருக்கு, இலங்கையில் தொற்றுப்பரவ வாய்ப்பில்லை என்று சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

குறித்த நபர் இலங்கைக்குள் எந்தச் சந்தர்ப்பத்திலும் பிரவேசிக்கவில்லை. அவர் இலங்கை ஊடாக ஆஸ்திரேலியா சென்றுள்ளார் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஆஸ்திரேலியாவின் மெல்பேர்னில் தற்போது பரவத் தொடங்கியுள்ள கொரோனா வைரஸுக்கு, இலங்கையிலிருந்து சென்ற நபரே காரணம் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

மெல்பேர்ன் நகரில் புதியவகை 'டெல்டா' அல்லது இந்திய வகை கொரோனா வைரஸ் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 8 ஆம் திகதி இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியா சென்ற நபர் ஒருவர் மூலமே அங்கு இந்த வைரஸ் பரவத் தொடங்கியுள்ளது என்று ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன (எ-4)

## கொரோனா பரவலைத் தடுக்க புதிய தன்னார்வப் படையணி

கொழும்பு, ஜூன் 12

கொரோனாத் தொற்றுப் பரவலைத் தடுக்க, தன்னார்வப் படையணி ஒன்றை அமைக்க, சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

கொரோனாத் தடுப்புப் பணிகளில் நேரடியாக ஈடுபடாத சுகாதார ஊழியர்களை, குறித்த பணிகளில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன், தன்னார்வப் படையணி ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆர்வமுடையவர்கள் சுகாதார அமைச்சின் இணையத்தளத்துக்குப் பிரவேசித்து, இதற்காக பதிவுசெய்துகொள்ள முடியும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-4)

## தடுப்பூசி ஏற்றமாட்டேன் அடம்பிடிக்கிறார் சஜித்

கொழும்பு, ஜூன் 12

நாட்டில் கொரோனாத் தடுப்பூசியைப் பெறுவதற்கு தகுதியான அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றப்படும் வரை, மக்கள் சேவகன் என்ற அடிப்படையில் நான் தடுப்பூசியை ஏற்றிக்கொள்ளப்போவதில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றிலிருந்து மீண்ட எதிர்க்கட்சித் தலைவர் நேற்று கங்காராம விகாரைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

கொரோனாத் தடுப்பூசியை நிராகரித்தாலேயே எனக்கும், எனது மனைவிக்கும் கொரோனாத்தொற்று ஏற்பட்டது. எமக்குத் தடுப்பூசி கிடைப்பதற்கு முன்னர் இந்த நாட்டிலுள்ள மக்களுக்கு அது கிடைக்க வேண்டும் என்பதற்காகவே தடுப்பூசியை நிராகரித்தோம். அந்தக் கொள்கையில் இன்றும் நான் உறுதியாக நிற்கின்றேன். இந்த நாட்டிலுள்ள மக்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படும் வரை மக்கள் சேவகன் என்ற அடிப்படையில் நான் தடுப்பூசியைப் பெறுவதற்கு எதிர்பார்க்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (எ-4,44)



## 26 பிரிவுகள் விடுவிப்பு

கொழும்பு,ஜூன் 12

7 மாவட்டங்களைச் சேர்ந்த 26 கிராமசேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்று இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக மொனராகலை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, நுவரெலியா, மட்டக்களப்பு, களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சில பகுதிகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## அனைத்து வங்கி ஊழியர்கள் 75 ஆயிரம் பேருக்குத் தடுப்பூசி

அரசிடம் கோரிக்கை



கொழும்பு, ஜூன் 12

வங்கிச் சேவை அத்தியாவசிய சேவையாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் இலங்கை முழுவதிலும் உள்ள 75 ஆயிரம் வங்கிப் பணியாளர்களுக்கும் தடுப்பூசிகளை ஏற்றுவதற்கான எந்தத் திட்டமும் அரசிடம் இல்லை என்று இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் தலைவர் சன்னா திசாநாயக்க தெரிவித்தார்.

வங்கிக் கிளைகள் பெரும்பாலும் சிறிய இடங்களில் அமைந்துள்ளன. தலைமை அலுவலகத்தில் அதிகளவான பணியாளர்கள் பணியாற்றுகின்றனர். வாடிக்கையாளர்கள் வங்கிகளுக்கு தினமும் வருகின்றனர். அவர்களின் ஆவணங்களை அவர்கள் கையாளவேண்டும். இதனால் வங்கிப் பணியாளர்களுக்கு தொற்று ஆபத்து அதிகம். இதுவரை வங்கிப் பணியாளர்கள் 400 பேர் தொற்றுக்கு இலக்காகி உள்ளனர். இதனால் வங்கிக் கிளைகளை மூடவேண்டிய நிலைமையும் ஏற்பட்டது.

இதனைக் கருத்தில் கொண்டு ஆகக் குறைந்தது வங்கிகளின் முன்களப் பணியாளர்களுக்காவது தடுப்பூசி ஏற்றப்படவேண்டும் - என்றார் திசாநாயக்க. (ஒ.5,இ)



## 1,038 பேர் நேற்றும் கைது

கொழும்பு,ஜூன் 12

தனிமைப்படுத்தல் விதிகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் நேற்றும் ஆயிரத்து 38 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கைதானவர்களில் அதிகமானோர் குளியாப்பிட்டி, இரத்தினபுரி மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

அதேவேளை இதே குற்றச்சாட்டுக்களில் இதுவரை 29 ஆயிரத்து 15 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## கொரோனாவிலிருந்து மீண்டனர் சஜித் தம்பதி



கொழும்பு, ஜூன் 12

கொரோனாத் தொற்றிலிருந்து, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும், அவரின் மனைவியும் பூரணமாகக் குணமடைந்து நேற்று வீடு திரும்பினர்.

கொரோனாத் தொற்றுக்கு இலக்கான இருவரும் கொழும்பிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தனர்.

இருவரும் குணமடைந்து வீடு திரும்பியதும், கொழும்பு கங்காராம விகாரைக்குச் சென்று ஆன்மீக வழிபாடுகளில் ஈடுபட்டனர். மகாநாயக்க தேரர்களின் ஆசியையும் பெற்றனர்.

ஓரிரு நாள்கள் ஓய்வுபெற்றதும் செயற்பாட்டு அரசியலை சஜித் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளார். எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்ற அமர்வு நடைபெறும் பட்சத்தில் அதில் பங்கேற்பார். சஜித் தலைமையிலேயே 21 ஆம் திகதி நாடாளுமன்றக்குழுக் கூட்டமும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-4,44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்வாழ் உயிரின இனப்பெருக்கம்: கடலில் இறக்கப்பட்ட பேருந்துகள்!

## வடக்கில் நடவடிக்கை



**யாழ்ப்பாணம், ஜூன் 12**

**வளங்களை அதிகரிப்பதற்கு சாத்தியமான அனைத்து வழிவகைகளும் பயன்டுத்தப்பட வேண்டும் என்ற அடிப்படையில் வடக்கு கடலில் பேருந்துகள் இறக்கிவிடப்பட்டுள்ளன என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.**

வளங்களின் அதிகரிப்பானது மக்களின் வாழ்வாதாரம் வலுப்படுத்தப்படுவதை நோக்கமாகக் கொண்டது எனவும் தெரிவித்துள்ளார்.
வடக்கு கடலில் கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கத்துக்கு ஏதுவான கடல் பிரதேசங்களை அடையாளங்கண்டு, பயன்படுத்த முடியாது கைவிடப்பட்ட இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேரூந்துகள் மற்றும் புகையிரதப் பெட்டிகளை இறக்கி விடுவதன் மூலம் மீன்களின் இனப் பெருக்கத்துக்கு ஏதுவான கடல் நீரடிப் பாறைக்கு இணையான சூழலை உருவாக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.
கடற்படையின் ஒத்துழைப்புடன் கடற்றொழில் திணைக்களத்தால் வடக்கு கடலில் நேற்று ஆரம்பிக்கப்பட்ட, குறித்த செயற்றிட்டத்தின் முதற் கட்டத்தில் சுமார் 30 பேரூந்துகளை கடலில் இறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. முதலாவது தொகுதி பேரூந்துகளை காங்கேசன்துறை, துறைமுகத்தில் இருந்து ஏற்றிச் சென்ற சயுரு எனும் கப்பல், அடையாளப்படுத்தப்பட்ட கடல் பகுதியில் குறித்த பேரூந்துகளை கடலின் அடியில் இறக்கியுள்ளது. (ஒ.இ)




# மேலும் 20 தொற்றாளர்கள் மன்னாரில் அடையாளம்

## அதிகமானோர் மீனவர்கள்

மன்னார். ஜூன் 12
மன்னார் மாவட்டத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளின்போது 20 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
மன்னார் மாவட்டத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் வியாழன் மற்றும் நேற்று வெள்ளி ஆகிய இரு தினங்களில் கிடைக்கப்பெற்றுள்ளன.
இதன்போது 20 கொரோனாத் தொற்றாளர்கள் புதிதாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனைக்கு சிகிச்சைக்குச் சென்றபோது தொற்றாளராக இனங் காணப்பட்டார்.
ஏனைய 19 நபர்களும் கடந்த வெள்ளிக்கிழமை பனங்கட்டிக்கொட்டு மற்றும் எமில் நகர் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட 412 பி.சி.ஆர்.பரிசோதனையின் அடிப்படையில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
இவர்களுடன் சேர்த்து சமூகத்தில் நாள் ஒன்றுக்கு 4 நபர்கள் வீதம் இம்மாதம் 46 நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இம்மாதம் ஆயிரத்து 784 பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, மொத்தமாக 18 ஆயிரத்து 808 பி.சி.ஆர். பரிசோதனைகள் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுமக்கள் தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தொற்று நோயில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
மாவட்டத்துக்கான சமூக தடுப்பூசி வழங்கல் நடவடிக்கை வெகுவிரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.
கடந்த வாரத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் அதிகமாக கடற்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு தொற்று உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதால், மீன்வாடிகளிலும் நெருக்கமாக இருந்து தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது, சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் கடைபிடித்து தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ப-56)

# முத்துஐயன்கட்டு கிராமத்தின் உள்ளக வீதிகள் சீரமைப்பு

முல்லைத்தீவு,ஜூன் 12
ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட முத்துஐயன்கட்டு கிராமத்தில் நீண்டகாலமாக சீரமைக்கப்படாதிருந்த உள்ளக வீதிகள் தற்காலிகமாக சீரமைக்கப்பட்டு வருகின்றன.
சுமார் பத்து கிலோ மீற்றருக்கும் அதிகமான உள்ளக வீதிகள் குன்றும் குழியுமாக காணப்பட்ட நிலையில் குறித்த வீதிகளை தற்காலிகமாகவேனும் சீரமைத்து தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.
இதனையடுத்து இராணுவத்தினர் பொது மக்களுடன் இணைந்து தற்காலிகமாக வீதிகளை சீரமைக்கும் பணிகளை நேற்று ஆரம்பித்துள்ளனர்.
இராணுவத்தினரின் கனரக இயந்திரங்கள் மற்றும் பொதுமக்களின் 10 உழவு இயந்திரங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி குறித்த உள்ளக வீதிகள் சீரமைக்கப்படுகின்றன.
வீதி சீரமைப்பு பணிகளில் 64ஆவது படைப்பிரிவின் இராணுவ பொறுப்பதிகாரி 643 ஆவது பிரிகேட், இராணுவ பொறுப்பதிகாரி உள்ளிட்டோர் வருகை தந்து வீதி சீரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்தனர். (ஐ-19)





### இந்தியாவில் இருந்து

# கடல்வழியாக வந்தவருக்கு 5 லட்சம் ரூபா ஆள்பிணை

முல்லைத்தீவு,ஜூன் 12
இந்தியாவில் இருந்து கடல்வழியாக இலங்கைக்கு வந்த இளைஞனை ஆள் பிணையில் செல்ல முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக நாட்டுக்கு வந்த இளைஞர் ஒருவர் முள்ளியவளை பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார். குறித்த சந்தேகநபர் தொடர்பான வழக்கு நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன்போது சந்தேகநபரை 5 லட்சம் ரூபா ஆள் பிணையில் விடுதலைசெய்ய உத்தரவிட்டுள்ளதுடன், குறித்த வழக்கின் விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 25 ஆம் திகதிக்கும் திகதியிடப்பட்டுள்ளது. (ஐ-19)

# பயணத்தடை காரணமாக சில்லறைத் தட்டுப்பாடு

முல்லைத்தீவு,ஜூன் 12
பயணத்தடை காரணமாக நடமாடும் வியாபாரிகளிடம் பொருள்களை கொள்வனவுசெய்ய சில்லறைக் காசுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
நடமாடும் வியாபாரிகள் தமது பொருள்களை கிராமங்களுக்கு கொண்டு செல்லும்போது அரசின் 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவுகளைப் பெற்ற வறிய குடும்பங்கள் ஆயிரம் ரூபாவை பொருள்கள் கொள்வனவுக்காக வழங்குகின்றனர். இதனால் மீதிப் பணம் வழங்க சில்லறை இல்லை என்ற காரணத்தால் வியாபாரிகள் பொருள்களை வழங்காமல் செல்கின்றனர். இதன் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர்.
வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ள நிலையில் தமது பணத்தை சில்லறையாக மாற்றுவதில் பொதுமக்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.
நேற்றுமுன்தினம் முல்லைத்தீவில் முதிய பெண்மணி ஒருவர் ஆயிரம் ரூபா தாளுடன் பாண் வாகனம் ஒன்றை மறித்துள்ளார். சில்லறை இல்லை எனத் தெரிவித்து பாண் வழங்காது வாகனம் சென்று விட்டது என குறித்த முதியவரால் தெரிவிக்கப்பட்டது. (ஐ-13)

# பகலில் வீட்டுக்குள் நுழைந்த திருடர்கள்

## மடக்கிப்பிடித்த பொதுமக்கள்

உடுவில்,ஜூன் 12
வீட்டுக்குள் புகுந்து மோட்டரை திருடிக் கொண்டு தப்பிக்க முயன்ற இருவரை ஊர் மக்கள் மடக்கிப்பிடித்தனர்.
இந்தச் சம்பவம் உடுவில் தொம்பை வீதியில் உள்ள வீட்டில் நேற்றுப் பகல் இடம்பெற்றுள்ளது. வீட்டின் கதவைக் கழற்றிவிட்டு உள்ளே புகுந்த திருடர்கள் மோட்டார் நீர்ப்பம்பியைத் திருடிக் கொண்டு தப்பிக்க முயன்றவேளை வீட்டிலிருந்த பெண் கண்டுள்ளார்.
குறித்த பெண் எழுப்பிய குரலைக் கேட்டு ஓடிவந்த அயலவர்கள் திருடர்கள் இருவரையும் மடக்கிப் பிடித்தனர்.
சுன்னாகம் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார், சந்தேகநபர்கள் இருவரையும் கைதுசெய்து அழைத்துச் சென்றனர். (ஐ-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேர்ள் கப்பல் நிறுவனத்திடம்

# 50 பில்லியன் டொலர் நஷ்டஈடு கோரமுடியும்

### சூழல் பாதுகாப்பு அமைப்பு தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 12**

**இலங்கையில் கடல் வளத்துக்கும், மீனவர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனம், 50 பில்லியன் டொலரை நஷ்ட ஈடாக வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.**

சூழல் பாதுகாப்புச் சார்ந்த அமைப்பான 'இலங்கையைப் பாதுகாப்போம்' அமைப்பு இதனை வலியுறுத்தியுள் ளது. இது தொடர்பில் அமைப்பின் செயலாளர் ஆனந்த சாகர தேரர் தெரிவிக்கையில்,

குறித்த கப்பலில் எண்ணெய் கசிந்து, தற்போது கடல்நீரில் கலந்து வருகின்றது என்று அறிகின்றோம். கடந்த முறை நியூ டயமன்ட் கப்பலால் ஏற்பட்ட பாதிப்புக்கு இலங்கை கோரிய நஷ்டஈடு கிடைக்கவில்லை. அதே நிலைமை சிங்கப்பூர் கப்பல் நிறுவனத்தாலும் ஏற்படக்கூடாது. ஒரு சில பௌத்த தேரர்கள், அரசியல்வாதிகள் திரைமறைவில் நிறுவனத்தின் இலங்கைப் பிரதிநிதிகளுக்குப் பின்னால் உள்ளனர் என்றும் அறிகின்றோம். எனவே உடனடியாக சிங்கப்பூர் நிறுவனம் பொறுப்புக்கூற வேண்டும். குறித்த கப்பல் ஒருவேளை கொழும்பு துறைமுகத்துக்குள் தீப்பற்றியிருந் தால், எத்தனை பேர் உயிரிழந்திருப்பர். எனவே எவ்வித அழுத்தங்களும் இன்றி, 50 பில்லியன் டொலரை சிங்கப்பூர் நிறுவனம் நஷ்டஈடாக வழங்க வேண்டும்- என்றார். (எ-4)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 29 . 09 . 1939



மறைவு 05 . 06 . 2019

அமரர் ஆறுமுகம் சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற தபால் ஊழியர்)

திதி : வைகாசி வளர்பிறை துதியை (12.06.2021)

வளர்த்தெடுத்து அறிவூட்டி ஆளாக்கி வைத்துவிட்டு
அவசரமாக ஏன் அப்பா அவனிவிட்டு சென்றீர்கள்
ஆண்டுகள் இரண்டென்ன ஆயிரம்தான்
கடந்தாலும் ஆறாது அப்பா எம் இதயம்

கந்தரோடை மேற்கு,
சுன்னாகம்.

குடும்பத்தினர்.



## கொழும்புக் கடலில் எண்ணெய்ப் படலம்?

### உறுதிப்படுத்தியது நாரா

கொழும்பு, ஜூன் 12

கொழும்புக் கடற்பரப்பில் எண்ணெய் படலம் ஏற்பட்டுள்ளது. எனினும் பேர்ள் கப்பல் தீப்பற்றிய கடற்பரப்பை அண்மித்த பகுதியில், மசகு எண்ணெய் கலக்கவில்லை என்று நாரா நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடலில் டீசல் அல்லது மண்ணெண்ணெய் கலக்கப்பட்டிருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. குறித்த எண்ணெய்ப் படலம் 19 கடல் மைல் வரை பரவியிருந்தது. அது தற்போது 5 முதல் ஆறு மைல் வரை கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் எண்ணெய் பரவுவதை மேலும் கட்டுப்படுத்த 'பூம்' என்ற தொழில்நுட்பம் பயன்படுத்தப்படவுள்ளது. எனினும் காந்த சக்தியைக் கொண்டு எண்ணெய்யை அகற்றுவதற்கான சாத்தியப்பாடு இல்லை. எண்ணெய் படலங்கள் காணப்படுவதன் ஊடாக, கடலுக்குள் சூரிய ஒளி பிரவேசிக்காது. இதனால் கடல் வாழ் உயிரினங்கள் இறக்கக்கூடும். எண்ணெய் மணற்பாறைகளில் படியும் பட்சத்தில், குறித்த பாறைகள் வலுவை இழப்பதன் ஊடாக மண்ணரிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன என்றும் நிறுவனம் எதிர்வு கூறியுள்ளது. (எ-4)

## பேர்ள் கப்பலால் பாதிப்பு 20 வருடங்கள் நீடிக்கும்

### அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 12

இலங்கைக் கடற்பரப்பில் தீப்பற்றிய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலால், கடலுக்கு ஏற்பட்ட பாதிப்பு, இன்னும் 20 வருடங்களுக்கு நீடிக்கும் என்று சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கப்பலால் ஏற்பட்ட சேதங்களை டொலர்களிலும் மதிப்பிட முடியாது. நாங்கள் ஏற்கனவே நாடு முழுவதும் கரை ஒதுங்கியுள்ள பிளாஸ்ரிக் துகள்களின், பெரிய குவியல்களைச் சேகரித்திருக்கிறோம்.

இதில் எத்தனை மில்லியன் துகள்களை மீன்கள் சாப்பிட்டுள்ளன என்பது எங்களுக்குத் தெரியாது. கடற்கரைகளில் குவிந்துள்ள பிளாஸ்ரிக் துகள்கள் சேகரிக்கப்பட்டு, 40 கொள்கலன்களில் சேமிக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் நாட்டுக்கு எவ்வளவு அதிகமான பிளாஸ்ரிக் இறக்குமதி செய்யப்படுகிறது என்பதை நாம் இப்போது கற்பனைசெய்து கொள்ளலாம். 10 வீதத்துக்கும் குறைவான பிளாஸ்ரிக் மறுசுழற்சி செய்யப்பட்டு மீதமுள்ளவை சுற்றுச்சூழலுக்கு வெளியிடப்படுகின்றன.

ஆகவே எக்ஸ்பிரஸ் கப்பல் மூழ்கியதால் ஏற்பட்ட சேதம், ஈடு செய்யப்பட வேண்டும். பொறுப்பான அனைவரையும் அடையாளம் கண்டு தண்டிக்க வேண்டும். இது தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக ஏற்கனவே இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன- என்றார். (எ-4)

## மொறட்டுவ மேயர் பிணையில் விடுவிப்பு

கொழும்பு, ஜூன் 12

மொறட்டுவ நகர மேயர் சமன் லால் பெர்னாண்டோ பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

தடுப்பூசி செலுத்தும் வேலைத்திட்டத்தின் போது மருத்துவரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டில் இவர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

சந்தேகநபர் மொறட்டுவ நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

மீண்டும் நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். அவரை பிணையில் விடுவிக்க நீதிமன்று உத்தரவிட்டது. (எ-4)



## சுற்றாடல் சட்டங்களில் விரைவில் திருத்தங்கள்

கொழும்பு, ஜூன் 12

சுற்றாடல் சட்டங்களில் திருத்தங்களை மேற்கொண்டு, புதிய சுற்றாடல் சட்டத்தைத் தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று சுற்றாடல் அமைச்சின் செயலாளர் விசேட மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக சுற்றாடல் சட்டங்களை மீறுவோருக்கு விதிக்கப்படும் தண்டத்தை ஒரு லட்சம் ரூபா வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் காலாவதியான அனுமதிப்பத்திரங்களுடன் சுற்றாடல் சார் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் அடையாளம் காணப்பட்டால், அனுமதிப்பத்திரம் காலாவதியாகிய திகதியிலிருந்து அவர்களுக்கு தண்டத்தை அறவிட திருத்தம் மேற்கொள்ளப்படும்.

இதுவரை சதுப்புநிலம் என்ற பதத்துக்குக் காணப்பட்ட குறைபாடு, புதிய சட்டத்தில் மாற்றப்படும். இரசாயனப் பயன்பாடு தொடர்பிலும் பல்வேறு விடயங்கள் புதிய சட்டத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன. இந்தப் புதிய சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

## நாட்டை மீட்பதற்கு கூட்டுப்பொறிமுறை

### ஹரீன் வலியுறுத்து

கொழும்பு,ஜூன் 12

இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, அரசியல் கட்சிகள் கூட்டுப்பொறிமுறையொன்றை செயற்படுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ வலியுறுத்தியுள்ளார்.

அனைத்து அரசியல் கட்சிகளும் எதிர்காலத்தில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் ஆவணமொன்றை உருவாக்க வேண்டும்.


நாட்டை பத்து வருடங்கள் ஆட்சி செய்யும் விதத்தில் இந்தப் பொறிமுறையை உருவாக்க வேண்டும். கொரோனாவுக்குப் பின்னரான சூழலை நாடு எதிர்கொள்ள வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு உருவாக்கப்படும் ஆவணத்துக்கு. இளம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முக்கியமான பங்களிப்பை வழங்குவதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி சிறப்புமுகாமில் தொடர்கின்றது இலங்கைத் தமிழர்களின் போராட்டம்

**யாழ்ப்பாணம், ஜூன் 12**

**தமிழகத்தின், திருச்சி சிறப்புமுகாமில் உள்ள இலங்கைத் தமிழர்களின் உணவு தவிர்ப்பு போராட்டம் மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.**



தம்மை விடுதலை செய்யவேண்டும் இல்லையேல் கருணைக் கொலை செய்யவேண்டும் என வலியுறுத்தியே அவர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இந்தப் போராட்டம் தொடர்பாக தமிழக முதலமைச்சருக்கு கடிதம் ஒன்றையும் அவர்கள் அனுப்பியுள்ளனர்.

"தண்டனைக்காலம் நிறைவுற்ற நிலையிலும் நாம் விடுவிக்கப்படவில்லை. எமது குடும்ப உறுப்பினர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில், அவர்களைக் கவனிப்பதற்காவது அனுமதி வழங்கப்படவேண்டும்" என அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

திருச்சி மத்திய சிறைமுகாமில் இலங்கைத் தமிழர்கள் 78 பேரும், நைஜீரியா மற்றும் இந்தோனேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 108 பேரும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ப-19)



## 50 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

தாவடி, ஜூன் 12

தாவடி வடக்கு ஜே/194 கிராம அலுவலர் பிரிவில் 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

பெண்தலைமைத்துவம் மற்றும் மாற்றுவலுவுடைய குடும்பங்களுக்கே யாழ்ப்பாணம் கேகேபி கழகத்தால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-159)

## 30 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

பருத்தித்துறை, ஜூன் 12

பயணத்தடை காரணமாக வாழ்வாதாரத்தை இழந்து பாதிப்புக்கு உள்ளாகிய 30 குடும்பங்களுக்கு வட மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தனிப்பட்ட நிதியில் உலருணவுப் பொருள்களும், மதிய உணவுப்பொதியும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் சிரேஸ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ணவின் குடும்பத்தினர் மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வாழும் 100க்கு மேற்பட்ட மக்களுக்கும் உலர் உணவுப்பொதிகள் பொலிஸ்மா அதிபரால் வழங்கப்பட்டன. (ஐ-26)





## 20 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

கிளிநொச்சி, ஜூன் 12

முறிகண்டி செல்வபுரம் பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட 20 குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா பெறுமதியான உலருணவு பொருள்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி திருநகரில் உள்ள பிறேம் பிறதர்ஸ் எனும் நான்கு சகோதரர்கள் தமது சொந்த நிதியிலிருந்து குறித்த உலருணவு பொதிகளை வழங்கினர். (ஐ-6)



## புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 30 பேருக்கு உணவுப்பொதிகள்

முல்லைத்தீவு, ஜூன் 12

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களது குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

வற்றாப்பளை இளைஞர் அணியினரின் அனுசரணையில் பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவரின் அன்பளிப்பில் இந்த உதவிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன.

இந்த உலருணவுப்பொதிகள் குமுழமுனை, ஆறுமுகத்தான்குளம், குமாரபுரம், மாமூலை, கணுக்கேணி கிழக்கு, தண்ணீரூற்று மேற்கு, கிச்சிராபுரம், வற்றாப்பளை மற்றும் கேப்பாபுலவு ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்பட்டன. (ஐ-13)

## சுகாதாரப் பொருள்கள் கையளிப்பு

மன்னார், ஜூன் 12

அரச சார்பற்ற அமைப்புக்களால் வழங்கப்பட்ட ஒரு தொகுதி சுகாதாரப் பொருள்கள் நேற்று மன்னார் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெலினால் சுகாதாரத் துறையினரிடம் கையளிக்கப்பட்டன.



கொரானாத் தொற்று சிகிச்சை நிலையங்களில் கடமையாற்றுபவர்களுக்கு என அரச சார்பற்ற அமைப்புக்களால் முகக்கவசம் மற்றும் தொற்று நீக்கி ஆகியவை உள்ளிட்ட பல்வேறு சுகாதாரப் பொருள்கள் அண்மையில் கையளிக்கப்பட்டிருந்தன.

குறித்த சுகாதாரப் பொருள்கள் மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் கொரோனா சிகிச்சை நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

நிகழ்வில் மருத்துவர், மன்னார் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ-56)




## விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

கொடிகாமம், ஜூன் 12

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் கொரோனா மருத்துவ பிரிவினருக்கு ஒருதொகுதி விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பசுந்தேசம் அமைப்பினரிடம் மருத்துவமனையினர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உள்ளக விளையாட்டு உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஐ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனைசார் உற்பத்தித் தொழில்நுட்பத்தால் அளப்பெரும் சேவைகள் புரிந்த சேந்தன்



அமரர் வீரகத்தி சேந்தன், பிரபல நிறுவனமொன்றின் ஸ்தாபகரும் தொழில் வழங்குநரும் ஆவார். இவர் இந்த நிறுவனத்தின் மூலம், எமது மண்ணில் நான்கு தசாப்தங்களாக உயர்தொழில்நுட்ப இயந்திரங்களை உருவாக்கி, தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம் படுத்தி உள்ளார். சேந்தன், மக்களின் வறுமை நிலை மையை போக்குவது தொடர்பில் பனை வளத்தின் தொழில்திறனை இயந்திரமயமாக்குவதற்காக வடிசா லைகளுக்குரிய பொறித்தொகுதிகளை பன்முகப்படுத் தப்பட்ட தொழில்முறைமையை கையாண்டு உருவாக் கிய சிறந்த பொறியியலாளர். அவ்வகையில், பனை சார் தொழில்நுட்பத்தின் பிதாமகரான இவர் திக்கம், வரணி, சங்கானை, புதுக்குடியிருப்பு, கைதடி, கண் டாவளை போன்ற இடங்களில் வடிசாலைகளை வடி வமைத்து, தொழிற்சாலைகளை நிறுவினார். அத்தோடு யுத்தகாலத்திலேயே முன்னோடி உற்பத்தி தொழிற்சாலையாக பனஞ்சீனி தொழிற்சாலையை வடிவமைத்துக்கொடுத்தார். பதநீர் மற்றும் போத்தல் கள் உற்பத்தி தொழிற்சாலைகளை இயந்திரமயமாக்கினார். உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்துவதற்காக இவரால் வடிவமைத்து உருவாக்கப்பட்ட இயந்திரங்களில், தெங்கு உற்பத்தியை மையப்படுத்தி நவீனமயமாக்கிய எண்ணெய் ஆலைகள் சாவகச்சேரி, பளை, மட்டுவில் பகுதிகளில் 80களில் அமையப்பெற்றன. தும்பு உற்பத்தி தொழிற்சாலை இயந்திரங்களை அரியாலை மல்லாகம் போன்ற இடங் களில் நிறுவினார்.

எம்மண்ணில், தொழில் வளத்தைப் பெருக்குவதற்காக உற்பத்தி தொழிற்சாலைகளுக் கான மற்றும் குடிசைக் கைத்தொழில்களுக்கான இயந்திரங்களையும் உருவமைத்து தொடர்ந்து அதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்.

அவ்வகையில் தொழிற்சாலை இயந்திரங்களில், சொக்லேட் தயாரிப்பு இயந்திரத்தை கோள் இயக்கமுறைமையை கையாண்டு உருவாக்கினார். பழங்களை பதனிட்டு, பிரித்தெடுத்து மற்றும் போத்தலில் அடைக்கும் இயந்திரங்களையும் உபகரணங்களை யும், மற்றும் பால் உற்பத்தி இயந்திரங்களையும், கால்நடைத்தீவன உற்பத்தி இயந்திரங் கள் போன்றவற்றையும், சவர்க்கார உற்பத்தித் தொழிற்சாலை இயந்திரங்களையும், குழாய்க்கிணறு அடிக்கும் இயந்திரம், கோப்பித்தூள் அரைப்பதற்கான விசேட இயந்திரம், மற்றும் திரவ பதார்த்தங்களுக்கான இயந்திரங்களையும் உருவமைத்தார்.

எமது பிரதேசத்தின் உணவு விழுமியங்களில் ஒன்றான, ஈரஅரிசி இடித்து வறுத்து பயன் படுத்தும் முறைமையை, அவசர உலகிலும் பாரம்பரிய உணவுமுறை தொடர்ந்து பேணப் படும் வகையில், எம்மக்கள் மத்தியில் இயந்திரமயப்படுத்தினார். மேலும் குடிசை கைத் தொழில் மேம்பாட்டுக்காக, இலகுமுறையிலான குறைந்த முதலீட்டு இயந்திரங்களையும் உபகரணங்களையும் வடிவமைத்துக் கொடுத்தார்.

சேந்தன் ஒரு தொழில்நுட்ப ஆய்வாளராக இருந்தது மட்டுமின்றி பல உற்பத்தியாளர்க ளுக்கு சிறந்த ஆலோசகராகவும் விளங்கினார்.

எமது நாட்டின் வளங்களை பயன்படுத்தி பொருளாதாரத்தை மேம்படுத்தலாம், என்று எண்ணிய இளம் பொறியியலாளரின் வேகமும் விவேகமுமே, அவரது தனியார் நிறுவ னத்தை உருவாக்க உந்து சக்தியாக அமைந்தது. ஆற்றல்மிக்க இளைஞனின் முயற்சியே மேற்கூறிய வடிவமைப்புக்களின் பட்டியல்.

ஒருமனிதன் தனது இறுதி மூச்சு வரை உழைக்க வேண்டும், என்ற எண்ணத்தை கொண்ட சேந்தன், தன் உயிர் பிரியும் முதல் நாள் வரையும் உழைத்தார், என்பதற்கு வரணி வடி சாலைக்கு அவருடைய மரணத்துக்கு முதல் நாள் விஜயமே சான்று

சமூக பொருளாதார தொழில்நுட்ப புரட்சிச் சிந்தனையாளர் மட்டுமின்றி, செயல்வீரருமான பொறியியலாளர் வீரகத்தி சேந்தனின் மறைவு, எம்மக்களுக்கும் எமது பிரதேசத்துக்கும் பேரிழப்பாகும்.

**கா.கோபாலகிருஸ்ணன்,**
விரிவாக்கல் துறை, பனை அபிவிருத்திச் சபை




# கொரோனாப் பெருந்தொற்றும் பயணக் கட்டுப்பாடுகளும்

கொவிட்- 19 உலகளாவிய ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியதை அடுத்து, உலக சுகாதார ஸ்தாபனத்தால் பெருந்தொற்றாக மார்ச் மாதம் 11ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது.

இந்த நோயின் அறிகுறிகளாக காய்ச்சல், மூக்கு ஒழுகுதல், தும்மல், லேசான சளி, தலைவலி, வரட்டு இருமல், உலர்ந்த அல்லது அரிப்பெ டுத்த தொண்டை, வாசனையற்ற தன்மை, வயிற்றுப்போக்கு, உடற் சோர்வு, மூச்சுக்கஷ்டம் போன்றன அமைகின்றன.

கொரோனாவைத் தவிர்ப்பதற்கு!

ஒரு நபரிடமிருந்து மற்றவர்களுக்கு நெருங்கிய தொடர்பு மூலம் பரவு கின்ற இந்த நோய் ஏற்படாது இருக்க செய்ய வேண்டிய நடைமுறை களாக பின்வருவன அமைகின்றன.

1. நாம் எமது கைகளை அடிக்கடி சவர்க்காரமிட்டு கழுவ வேண்டும்.
2. பொது இடங்களில் எப்போதும் முகக்கவசம் அணிய வேண்டும்.
3. தும்மும்போது எமது கைகளை பயன்படுத்துவதுடன் பின்னர் சவர்க் காரம் அல்லது சுத்திகரிப்பு திரவம் கொண்டு கைகளைக் கழுவ வேண்டும்.
4. கண்கள், மூக்கு, வாய் என்பவற்றை கைகளால் தொடுவதைத் தவிர்க்க வேண்டும்.
5. நோய் ஏற்பட்டவர்களுடனான தொடர்பைத் தவிர்க்க வேண்டும்.
6. நாம் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது வீட்டிலேயே இருக்க வேண்டும்.
7. தடுப்பூசி வழங்கப்படும்போது தவறாது பெற்றுக்கொள்ள வேண் டும்.
8. நோய்வாய்ப்பட்டு வீட்டில் இருக்கும் நிலையில், அதிகளவில் நீரா காரம் பருகுவதுடன் முடிந்தவரை ஓய்வெடுக்க வேண்டும்.

தவிர உலகெங்கிலுமுள்ள அரசு தலைவர்கள் தங்கள் நாட்டில் பயணக் கட்டுப்பாடுகள், ஊரடங்கு பணியிடங்களில் முன் எச்சரிக்கை கட்டுப்பா டுகள் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எமது நாட்டிலும் இக்கட்டுப்பாடுகள் கைக்கொள்ளப்பட்டு வருவதனால் பொருளாதார மந்தநிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். இதனைக் கருத்தில் கொண்டு அத்தியாவசியமான தேவைகளை பூர்த்திசெய்யும் முகமாக பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது. இந்த நிலையை தமக்குச் சாதகமாக சிலர் பயன்படுத்துவதனால் சமூக பெருந்தொற்றாக உரு வெடுத்தள்ளது கொரோனா. 'திருடனாய் பார்த்து திருந்தினாலொழிய திருட்டை ஒழிக்க முடியாது" என்பதற்கிணங்க நாம் ஒவ்வொருவரும் பொறுப்புள்ள குடிமகன் என்பதை உணர்ந்து எமக்கு நாமும் மற்றவர் களுக்கு நாமும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். நம்மை பாது காத்து அயலவரையும் பாதுகாப்போம். இலங்கையில் கொரோனாவை முற்றாக இல்லாதொழிப்போம்.

**மருத்துவர் சி.குமுதினி,**
வைத்திய உத்தியோகத்தர், மத்திய மருந்தகம், பருத்தித்துறை

# ஏழை நாடுகளுக்கு 100 கோடி தடுப்பூசிகள் ஜி7 நாடுகளினுடைய கூட்டத்தில் தீர்மானம்

பாரிஸ், ஜூன் 12

ஏழை நாடுகளுக்கு 100 கோடி தடுப்பூசி களை இலவசமாக வழங்க முன்வந் துள் ளன ஜி7 நாடுகள். ஜி7 நாடுகளின் கூட்டம் லண்டனில் அண்மையில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில்தான் இந்த முடிவு எடுக் கப்பட்டுள்ளது.

பிரிட்டனில் ஜி7 நாடுகளின் தலைவர்கள் பங்கேற்கும் கூட்டம் நடைபெற்றது. இதில், பருவநிலை மாற்றம், பொருளாதாரம், கொரோனா பெருந்தொற்று, புவிசார் அர சியல் குறித்து விவாதிக்கப்பட்டது. குறிப் பாக பெருந்தொற்று காலத்தில், பணக்கார நாடுகளான ஜி7 நாடுகள், உலகின் பிற நாடுகளுக்கு தடுப்பூசியை நன்கொடை யாக வழங்குவது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.


இந்த நிலையில், உலகின் பிற நாடுக ளுக்கு 100 கோடி தடுப்பூசிகளை ஜி7 நாடுகள் அளிக்கும் என பிரிட்டன் அறி வித்துள்ளது. அமெரிக்கா 50 கோடி தடுப் பூசிகளை அளிக்கப்போவதாக ஏற்கனவே தெரிவித்துள்ள நிலையில் இந்த அறி விப்பு வெளிவந்துள்ளது.

பிரிட்டன் தங்களிடம் உபரியாக உள்ள சுமார் 10 கோடி டோஸ்கள் கொரோனா தடுப்பூசியை வழங்கும் என்று அந்த நாட் டின் பிரதமர் போரிஸ் ஜான்சன் அறிவித் துள்ளார்.

முதல் 50 லட்சம் டோஸ்கள் வரும் செப் டம்பர் மாதத்துக்குள்ளாகவும் மேலும் 2.5 கோடி டோஸ்கள் இந்த ஆண்டு இறுதிக் குள்ளாகவும் வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இருமலை குணமாக்கும் வெற்றிலை துளசி சூப்

சளி, இருமல், தொண்டை வலியால் அவதிப்படுவர்கள் வெற்றிலை துளசி சூப் செய்து குடிக்கலாம்.

**தேவையான பொருட்கள்**

தண்ணீர் 1 கப்
சீரகத் தூள் 1/2 டீஸ்பூன்
மிளகு தூள் 1/2 டீஸ்பூன்
மஞ்சள் தூள் 1 டீஸ்பூன்
துளசி இலை ஒரு கைப்பிடி அளவு
வெற்றிலை 5 அல்லது 6 இலைகள்
புளிக் கரைசல் ஒரு டீஸ்பூன்
இஞ்சி ஒரு துண்டு
தக்காளி ஒன்று
சிவப்பு மிளகாய் ஒன்று
உப்பு தேவையான அளவு

**செய்முறை**

* இஞ்சியை நறுக்கிக் கொள்ளவும்.
* தக்காளியை பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.
* பாத்திரத்தில் தண்ணீர் ஒரு கப் (100 மி.லி) ஊற்றி, சூடானவுடன், மஞ்சள் தூள், ஒரு கைப்பிடி துளசி இலை, வெற்றிலைகள், புளி கரைசல், நறுக்கிய இஞ்சி, தக்காளி, சிவப்பு மிளகாய், தேவையான அளவு உப்பு சேர்த்து நன்கு கொதிக்க விடவும்.
* நன்றாக கொதித்து பக்குவம் வந்தவுடன் இறக்கி வடிகட்டி மிளகு தூள் சேர்த்து சூடாக சூப்பைப் பரிமாறவும்.

# பெண்களுக்கு அழகு சேர்க்கும் தாவணி




பாவாடை தாவணி நமது பாரம்பரியப் பண்பாட்டு உடை. இதனுடைய இடத்தை இன்று சுடிதார், பேண்ட் போன்றவை ஆக்கிரமித்துக் கொண்டு வருகின்றன. மொர்டன் டிரஸ் என்கின்ற இந்த இறக்குமதிகள் எல்லாம் கவர்ச்சியைக் காட்டி, பால் உணர்வை தூண்டுவனவாகவே அமைந்துள்ளன.

பெண்களுக்குக் கண்டிப்பாக இடுப்புப் பகுதிக்கு கொஞ்சமாகிலும் காற்றோட்டம் தேவை. இடுப்புப் பகுதி உடற் கூறு ரீதியாகப் பெண்கள் வாழ்வில் முக்கியத்துவம் வாய்ந்தது. ஜனனேந்திரியங்கள், கருப்பை, அண்டகோசங்கள் ஆகியவை எல்லாம் ஜீவன் ஜனனிக்கின்ற புனித இடமாகும். அப்பகுதிக்குத் தேவையான விட்டமின் 'டி' புளோரைடு, ஓசோன் ஆகியவை அன்றாடம் காற்றால், வெளிச்சத்தால் பெறப்பட்டு நலம் பெறுகின்றன.

இடுப்பில் கூடை, குடம், குழந்தை என எதனையும் சுமக்கும் போது புடவை, பாவாடை, தாவணி இவற்றினால் அசௌகரியம் மிகவும் குறைவு. மொர்டன் டிரஸ்சில் அசௌகரியம் மிக அதிகம். பாவாடை பிரில் என்கிற மடிப்பு வைத்துத் தைக்கப்படும். அதனால் விபரீதக் கவர்ச்சிகள் களையப்படுகின்றன. அதிகமான அருவருப்புகள் அகற்றப்படுகின்றன.

புடவையிலும் பிரில் வைத்துக் கட்டும்போது இடுப்புப் பகுதிக்கு சிறிது காற்றோட்டம் கிட்டும். தேவையற்ற கவர்ச்சி இருக்காது. கால் ஏனைய உறுப்புகளின் பரிமாணம் தென்படாது. வெப்பப் பிரதேசமான நமது மண்ணில் வாழும் மகளிருக்கு, பாவாடை தாவணியின் தன்மையும், தனிச்சிறப்பையும் வேறு எந்தவித உடைகளும் தராது.

பெண்களின் உடல் அமைப்புக்கும், அவர்களின் பிரச்சினைகளுக்கும் ஏற்றது எனத்தான் நமது முன்னோர்கள் நமக்கு ஒத்துப் போகின்ற உடைகளைக் கண்டறிந்து பயன்படுத்தி அதனைப் பண்பாட்டு உடை எனக் கண்டுகொண்டனர். நாகரீகம் என்கிற மயக்கத்திலும், பேஷன் என்கிற பேதமையாலும் நமது நலம் தரும் சம்பிரதாயங்களுக்கு நஞ்சு ஊட்டப்படுகிறது.



# தரையில் பாய் விரித்து உறங்குவதால் கிடைக்கும் நன்மைகள்....

பாயில் படு நோயை விரட்டு, இது எமது தமிழ் பழமொழி...

1) பாய் உடல் சூட்டை உள்வாங்கக்கூடியது.

2) கர்ப்பிணி பெண்கள் பாயில் உறங்குவதால் இடுப்பு வலி, முதுகு வலி வரவே வராது.

3) பாயில் உறங்கும் பழக்கமுடைய பெண்களுக்கு பிரசவ நேரத்தில் "சிசேரியன்" தேவைப்படாது.

4) பிறந்த குழந்தையை பாயில் உறங்க வைப்பதால் கழுத்தில் சுழுக்கு பிடிக்காது, குழந்தையின் முதுகெலும்பு சீர்படும் குழந்தை வேகமாக வளர உதவிடும்.

5) கல்வி கற்கும் மாணவ மாணவிகள் பாயில் உறங்கினால் இளம் வயது கூண் முதுகு விழாது.

6) பெரும்பாலான முதியோர்கள் தரையில் பாய் விரித்து உறங்குவதே அதிகம் விரும்புவார்கள். அதன் காரணம் 60 வயதுக்கு மேல் உடலில் இரத்த ஓட்ட பிரச்சினை இருக்கும் பாயில் சமமாக கால் கையை நீட்டி மல்லாக்க படுக்கையில் உடல் எங்கும் இரத்தம் சீராக பாய்ந்து கொழுப்பை குறைக்கிறது.

7) ஒரு பாய் மூன்று ஆண்டுகள் வரை அதன் தன்மையை இழக்காது.

இரும்பு மரக் கட்டிலில் "பிளாஸ்டிக் போம்" மெத்தையில் உறங்குவதை விட வெறும் தரையில் பாய் விரித்து உறங்குவது நம் உடலில் பெரும் மாற்றத்தையே ஏற்படுத்தக் கூடியது. "பாயின் எண்ணற்ற நன்மைகளை உணர்ந்த நமது பெரியோர்கள் "கல்யாண சீர்வரிசை கொடுக்கையில் பாய் இல்லாத ஒரு சீர்வரிசை கிடையவே கிடையாது," என்பது குறிப்பிடத்தக்கது.



# அரிசியில் இருக்கு அழகு!

**முகத்துவாரங்களை மூடும் அரிசி வோட்டர்!**

பொலிஷ் செய்யாத 2 டீஸ்பூன் அரிசியை நீரில் கழுவி, அதை ஒரு கப் நீரில் 20 நிமிடங்கள் ஊற விடவும். இந்தத் தண்ணீரால் தினமும் முகம் கழுவினால், முகத்தில் இருக்கிற துவாரங்கள் மூடி சருமம் இறுக்கமாகும். வியர்க்குரு மறையும். சருமம் பளிச்சிடும். இந்த நீரை ஃபிரஷ் ஷாகப் பயன்படுத்தினால்தான் பலன் கிடைக்கும். பிரிட்ஜில் வைத்துப் பயன்படுத்தக்கூடாது.

**நிறம் கூட்டும் அரிசி பேக்!**

பொலிஷ் செய்யாத அரைகப் அரிசியை 20 நிமிடங்கள் ஊறவைத்து வேக வைக்கவும். வெந்த அரிசியை, வேக வைத்த நீருடன் சேர்த்து அரைக்கவும். இதனுடன் ஒரு டீஸ்பூன் தேன் சேர்த்து நன்கு கலக்கவும். முகத்தைக் கழுவி விட்டு, அரிசி பேக்கை முகத்தில் பூசவும். 15 நிமிடங்கள் கழித்து கழுவினால் முகத்தில் இருக்கிற அழுக்கும் கிருமிகளும் நீங்கும்.

**கரும்புள்ளிகளை நீக்கும் அரிசி ஸ்கிரப்!**

பொலிஷ் செய்யாத 2 டீஸ்பூன் அரிசியை ரவை போல அரைத்து, தண்ணீர் விட்டு பேஸ்ட் போல குழைத்துக்கொள்ளவும். இதை முகத்தில் தடவி 15 நிமிடங்கள் ஊறவிட்டு, பிறகு ஆள்காட்டி விரலால் வட்டமாகத் தேய்த்துக் கழுவவும். இப்படிச் செய்தால் சருமத்தின் இறந்த செல்கள் உதிர்வதோடு கரும்புள்ளிகள் மறையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார தொழிற்சங்கங்களின் போராட்டம் பொருத்தமற்றது

## கூறுகின்றது மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஜூன் 12

கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள சூழலில், உயிரிழப்புக்கள் அதிகரித்துள்ள நிலைமையில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவது பொருத்தமான விடயம் அல்ல. இதை ஏனைய தொழிற்சங்கங்கள் உணர்ந்து சரிசெய்ய வேண்டும். இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நாளாந்த ஊடக சந்திப்பு நேற்று இடம்பெற்றது. அந்தச் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக் குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ண சிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

இன்று (நேற்று) பல சுகாதார தொழிற்சங்கங்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. தற்போதைய சூழலில் அவர்கள் போராட்டம் மேற்கொள்வது பொருத்தமற்றது.

மருத்துவர்களுக்குரிய கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. தமக்குரிய கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவில்லை என்பதை போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கோரிக்கையாக முன்வைத்துள்ளனர்.

கொரோனாத் தொற்றுடன் தொடர்புடைய விடுதிகள், அதி தீவிர சிகிச்சைப் பிரிவுகள் மற்றும் கொரோனாத் தொற்றுடன் தொடர்புடைய முன்களப் பணியாளர்களுக்கு கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சைக் கோரியிருந்தது.

கொரோனாத் தொற்றுடன் தொடர்புடைய பணியில் ஈடுபடும் மருத்துவர்களுக்கு மாத்திரம் மேலதிக நேரக் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது. ஏனைய மருத்துவர்களுக்கு அதிகரிக்கப்படவில்லை. அதே போன்று கொரோனாத் தொற்றுடன் தொடர்புடைய பணிகளில் ஈடுபட்டுள்ள ஏனைய சுகாதாரப் பணியாளர்களுக்கும் கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உறுப்பினர்களின் குறைபாடுகள் தொடர்பில் நாம் சுகாதார அமைச்சின் செயலருக்கு கடிதம் அனுப்பியிருந்தோம். அந்தக் கடிதத்தை அடிப்படையாக வைத்தும் சில தொழிற்சங்கங்கள் பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளோம் என அறிவித்துள்ளன. இது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. சுகாதார அமைச்சரின் தீர்மானம் அல்லது செயலரின் தீர்மானத்தின் அடிப்படையில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடலாம். ஆனால், நாம் எமது உறுப்பினர்களின் குறைபாடுகள் தொடர்பில் முன்வைத்த கடித்தை மையப்படுத்தி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது -என்றார். (ஒ.5)

முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### உள்ளூர்...

உள்ளூர் மாதிரிகளின் சோதனைகள் நடைபெறாது. இதனால் வடக்கு மாகாணத்திலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவிலும், மருத்துவமனைகளிலும் பி.சி.ஆர். மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்படுவதை தாமதிக்குமாறும் அல்லது இலங்கையின் ஏனைய பாகங்களுக்கு பி.சி.ஆர். மாதிரிகளை சோதனைக்கு அனுப்புமாறும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையால் வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

### ஐரோப்பிய...

இதனை அறியாமல் அவர்கள் தீர்மா னத்தை இப்போது நிறைவேற்றி யிருக்கலாம் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

**தீர்மானம்**

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கக்கோரும் இலங்கை தொடர்பான தீர்மானம் ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது. தீர்மானத்துக்கு ஆதரவாக 628 வாக்குகளும் எதிராக 15 வாக்குகளும் பதிவாகிய அதேவேளை, 40 பேர் வாக்களிப்பில் பங்கெடுத்திருக்கவில்லை. இலங்கையில் பாரதூரமான மனித உரிமை மீறல்கள் மீண்டும் இடம்பெறுகின்றமை கவலைக்குரிய விதத்தில் அதிகரித்துச் செல்வது தொடர்பாக ஆழ்ந்த கரிசனையைத் தீர்மானம் வெளிப்படுத்தியுள்ளது.

தாம் சந்தேகிக்கின்ற பொதுமக்கள் தொடர்பாக தேடுதல் மேற்கொள்வதற்கும் கைதுசெய்வதற்கும் தடுத்துவைப்பதற்கும் பொலிஸாருக்கும் எல்லையற்ற அதிகாரங்களை வழங்கும் சர்ச்சைக்குரிய பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கை தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தி வருவதற்கு எதிர்ப்பை வெளியிட்டதுடன், பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் எனவும் இல்லாவிடின் இலங்கைக்கு வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை மீளாய்வு செய்யவேண்டும் என்றும் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தினேஸ்**

ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ள விடயம் தொடர்பில் இலங்கை ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளது. இதனை அறியாமல் அவர்கள் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கலாம். எனவே இந்தத் தீர்மானத்தை முறியடிப்பதில் இலங்கைக்கு சவால் எதுவும் இருக்காது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை தொடர்பில் குறிப்பிட்டிருந்தாலும் அதனை நடைமுறைப்படுத்த முன்னர் இலங்கையுடன் ஐரோப்பிய ஒன்றியம் பேச்சு நடத்தும் என்றும் தினேஸ் குணவர்த்தன குறிப்பிட்டார். (ஒ.5.இ)

### 23 நாள்களில்

ளின்படி, முதல் 500 இறப்புக்கள் பதிவாவதற்கு சுமார் 343 நாள்கள் கடந்துள்ளன. இரண்டாவதாக 500 இறப்புக்கள் பதிவாவதற்கு 72 நாள்கள் கடந்துள்ளன.

1,001 முதல் 1,500 வரையான இறப்புக்கள் பதிவாவதற்கு 13 நாள்கள் கடந்துள்ளன. 1,500 முதல் 2,000 வரையான இறப்புக்கள் பதிவாவதற்கு வெறும் 10 நாள்களே கடந்துள்ளன. அதனடிப்படையில் 23 நாள்களில் ஆயிரம் இறப்புக்கள் பதிவாகியுள்ளன. (எ-4)

## 107 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

மன்னார், ஜூன் 11

பயணத்தடையால் தொழில் வாய்ப்பை இழந்து வறுமையில் உள்ள 107 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

மாந்தை மேற்கு பிரதேசத்துக்கு உட்பட்ட சவிரிகுளம், வங்காலை, தலைமன்னார் மற்றும் பியர் ஆகிய பகுதிகளில் வசிக்கும் அன்றாடம் கூலி வேலை செய்பவர்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் ஆகியவற்றுக்கே கடந்த திங்கட்கிழமை உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் பணிப்புக்கு அமைய தமிழீழ விடுதலை இயக்கத்தின் மன்னார் மாவட்ட காரியாலயத்தால் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-213)



## பேர்ள் கப்பல் பாதிப்புக்காக ஒரு லட்சம் டொலர் நிதி

### யுஎஸ்எயிட் அமைப்பு வழங்கியது

கொழும்பு, ஜூன் 12

எம்வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்காக அமெரிக்காவின் யுஎஸ்எயிட் நிறுவனம் உலக உணவுத் திட்டத்தின் ஊடாக இலங்கைக்கு ஒரு லட்சம் அமெரிக்க டொலர் நிதியை வழங்கியுள்ளது. கப்பல் விபத்தால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள குடும்பங்களுக்கு உதவி செய்ய இந்த நிநி உதவியை வழங்கியுள்ளதாக யுஎஸ்எயிட் தெரிவித்துள்ளது. (ஒ.5.இ)

# அமெ. காங்கிரஸ் தீர்மானத்தால் நாம் தொடை நடுங்கவில்லை

## வீறாப்பு பேசுகிறார் விமல்

கொழும்பு, ஜூன் 12

இலங்கை தொடர்பான விடயத்தைக் குறிப்பிட்டு அமெரிக்க காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றியமையால்தான் அமெரிக்க அதிகாரிகளைச் சந்தித்தோம். கண்டனங்களையும் தெரிவித்தோம். எமது இந்த நடவடிக்கை அவர்களின் மீதான தீர்மானத்தின் அச்சத்தால் எடுக்கப்பட்டது என்று எவரும் அர்த்தம் கற்பிக்கக்கூடாது. அது தவறு. இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இலங்கை தொடர்பில் அமெரிக்க காங்கிரஸில் அண்மையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானத்தில் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட ஆயுத இயக்கங்கள் தமிழ் மக்களின் [illegible]காக போராடின என்றும் தெரி[illegible]தது. இந்தத் தீர்மானம் தொடர்பில் இலங்கை தனது ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தது. அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர், இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டு நகர்த்த வேண்டாம் என்று கோரியிருந்தார். வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்ன, இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தின் துணைத் தூதரை நேரில் அழைத்து கண்டனம் வெளியிட்டிருந்தார். இவ்வாறானதொரு நடவடிக்கை ஏன் இலங்கை அரசு அவசர அவசரமாக மேற்கொள்கின்றது என்று அமைச்சர் விமல் வீரவன்சவிடம் கேட்டபோது,

அமெரிக்க காங்கிரஸ் கட்சியின் பிரதி நிதிகளின் இலங்கை மீதான தீர்மானம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் புத்துயிர் ஊட்டும் [illegible] அப்பட்டமான [illegible] இந்தத் தீர்மானத்தில் உள்ளன. இந்தத் தீர்மானத்துக்கு இலங்கை அரசு வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. தீர்மானம் தொடர்பான இலங்கை அரசின் நிலைப்பாடு வொஷிங்டனுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. தீர்மானம்போல் இலங்கை அரசை அடிபணிய வைக்கும் நோக்கில் அமெரிக்க காங்கிரஸ் தீர்மானமும் தயாரிக்கப்பட்டுள்ளது. எனினும், இரு தீர்மானங்களையும் நாம் அடியோடு நிராகரிக்கின்றோம். அமெரிக்க காங்கிரஸ் தீர்மானம், இலங்கை மீதான தீர்மானம் என்றபடியாலேயே அமெரிக்க அதிகாரிகளை அரச தரப்பினர் நேரில் சந்தித்து பலத்த கண்டனங்களைத் தெரிவித்துள்ளனர். அச்சம் காரணமாகவே அரசு இந்த நடவடிக்கையை முன்னெடுத்தது என எவரும் அர்த்தம்கொள்ளக்கூடாது- என்றார். (ஒ.5.22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
**சரஸ்வதி தேவராசா**

தோற்றம் 19.05.1944
மறைவு 27.05.2017



திதி - பூர்வபஷ்ச துதியை (12.06.2021)

நான்காண்டு கழிந்தது அம்மா – இன்று
ஆனாலும் உங்கள் நினைவுகள் அழியவில்லை.
அருமையான உமது திருமுகத்தை மீண்டும்
அன்புடன் காண்பதற்கு தவிக்கின்றோம்.

**நினைவில் கணவர்,**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

புதுவீதி (நீதிராஜா வீதி) கொக்குவில்
மேற்கு, கொக்குவில்.
077 615 3877, 021 222 5499

## சிலாபத்துறை கடற்கரையில்
# உயிரிழந்த நிலையில் கரையொதுங்கியது கடலாமை

மன்னார், ஜூன் 12



முசலி பிரதேசச் செயலர் பிரிவுக்குட்பட்ட சிலாபத்துறை கடற்கரையில் உயிரிழந்த நிலையில் கடலாமை ஒன்று நேற்று கரையொதுங்கியுள்ளது.

அண்மையில் இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றிய கப்பலில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆபத்தானது என சந்தேகிக்கப்படும் சில பொருள்கள் நேற்றுமுன்தினம் மன்னார் வங்காலை கடற்கரை மற்றும் சிலாபத்துறை கடக்கரையில் கரையொதுங்கின.

இதனையடுத்து அதிகாரிகள் குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர். சிறிய பிளாஸ்ரிக் உருண்டைகள் கடற்கரையோரங்கள் முழுவதிலும் சிதறிய நிலையில் காணப்பட்டன. இந்த நிலையில் நேற்றுக் காலை சிலாபத்துறை கடற்கரையில் உயிரிழந்த நிலையில் கடலாமை ஒன்று கரையொதுங்கியுள்ளது. இதனை குறித்த பிரதேச மக்களும், மீனவர்களும் பார்த்துள்ளதோடு, உரிய அதிகாரிகளின் கவனத்துக்கும் கொண்டுவந்தனர். (ஐ-56)

## ஆறாம் மாத நினைவலைகள்

அமரர்
**திருமதி பொன்மலர் (கோகிலா) சோதிநாதன்**



மண்ணுலகில் 15.07.1952
விண்ணுலகில் 16.12.2020

திதி – வளர்பிறை துதியை


மண்ணுலகம் விட்டு நீங்கள்
விண்ணுலகம் சென்று
மாதங்கள் ஆறு ஆனாலும்
ஆறாது அம்மா எம் துயர்
ஆண்டுகள் பல சென்றாலும்
அன்னை உங்கள் பாசத்திற்காக
ஏங்கித் தவிக்கிறோம் நாங்களம்மா
தவிப்புடன்
**கணவர், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**VACANCY**
Manager, Supervisor, Accounting Clerk, Receptionist, Counter Staffs, Hardware Technician, Office Admin, Telephone Operator, Cashier, Labour.
**0741 38 3368**

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.
- அலுமினிய பொருத்துனர் (Aluminium Fitting)
(அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்)
தொடர்புகளுக்கு : **076 866 3944**
**8.30 AM - 6.00 PM** தொடர்புகொள்ளவும்.

## நெஞ்சை விட்டகலா 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 10 . 09 . 1962
விண்ணில் 13 . 05 . 2021



தனது 59 ஆவது அகவையில் அமரத்துவம் அடைந்து இன்று
(12.06.2021) 31ஆம் நாளை எட்டியிருக்கும்
தொண்டர் சபைத் தலைவர்

**இரத்தினசபாபதி சக்திராஜா**
**(ராசன்)**


அவர்கள் இவ்வுலகை விட்டு
விடைபெற்ற போதும்
என்றும் அழியா நினைவுகளோடு - அவர்
ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
வீரமாகாளி தாயை வேண்டி
பிரார்த்திக்கும்

**நண்பர்கள், தொண்டர்கள்.**
**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய தொண்டர் சபை**

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக

## மரண அறிவித்தல்

பிறப்பு 25 . 02 . 1952
இறப்பு 11 . 06 . 2021



**நடராசா கோவிந்தராசா (பத்தர்)**

இல.64, காரைக்காட்டு லேன் வண்ணார்பண்ணையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா கோவிந்தராசா (பத்தர்) அவர்கள் நேற்று (11.06.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - இராஜலெட்சுமி தம்பதியரின் பாசமிகு புதல்வரும், காலஞ்சென்றவர்களான பாலகிருஷ்ணன் - தங்கம்மா தம்பதியரின் மருமகனும், பேரின்பராணியின் பாசமிகு கணவரும், தர்ஷிகா, அனுத்திரன், சாருஜன், உசாஜிகா ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மப்பிரியாவின் அன்பு மாமனாரும், வரதராசா, இரத்தினராசா ஆகியோரின் சகோதரரும், கதிரவேலுவின் (தம்பு) மருமகனும், உதயகுமார், சதானந்தகுமார், ஜெயராசா ஆகியோரின் மச்சானும், இராஜேஸ்வரி, சிவசோதிமலர், அமரர் லோகேஸ்வரி, கமலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.06.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.64, காரைகாட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P:021 222 3432

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நிலைமை....

ஜுன் 14 ஆம் திகதி காலை 4 மணிக்கு பயணக் கட்டுப்பாடு தளர்த்தப்படும் என்று நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பயணத் தடை 21ஆம் திகதிவரை நீடிக்கப்படுகின்றது என்று நேற்று அவர் தெரிவித்தார்.

வைரஸ் பரவல் இன்னும் கட்டுக்குள் வரவில்லை. இறப்பு வீதமும் அதிகரித்துள்ளது.

இதனால் பயணக் கட்டுப்பாடுகளை மேலும் ஒரு வாரகாலத்துக்கு நீடிக்குமாறு பல தரப்பினரும் கோரிக்கை விடுத்தனர். குறிப்பாக, தற்போதுள்ள நிலைமையில் ஆகக் குறைந்தது ஒரு வாரத்துக்காவது பயணத் தடையை நீடிக்குமாறு மருத்துவ சங்கமும் இன்று (நேற்று) வலியுறுத்தியிருந்தது. மருத்துவநிபுணர்களின் ஆலோசனைகளையும் நாம் புறக்கணிக்க முடியாது.

இந்தநிலையிலேயே அரச தரப்பில் மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

பயணக் கட்டுப்பாடு நடைமுறையில் உள்ள காலப்பகுதியிலும் எவ்வாறான சேவைகளை முன்னெடுக்கலாம் என்பது தொடர்பில் இராணுவத் தளபதி நேற்று விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டார்.

இதில் அவர் மேலும் கூறியவை வருமாறு.

உணவு மற்றும் அதியாவசிய பொருள்கள், நடமாடும் வாகன சேவை ஊடாக மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அந்தப்பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். அத்துடன், பிரதான நிர்மாணப்பணிகளைத் தொடர முடியும். ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் இதர தொழிற்சாலைகளில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளை அவ்வாறே முன்னெடுத்துச்செல்ல முடியும்.

விசவாய நடவடிக்கையையும் வழமை போல் முன்னெடுக்கலாம். சேதனப் பசளை உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் உற்பத்தி நடவடிக்கையை தொடர முடியும்.

அதேவேளை, பொருளாதார மத்திய நிலையங்கள் இரு நாள்களுக்கு திறக்கப்படவுள்ளன. திகதி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்." என்றார்.

பயணத்தடை நீடிக்கப்பட்டுள்ளதால், சுமார் ஒரு மாதத்துக்கும் மேற்பட்ட காலப்பகுதி பயணத்தடைக் காலமாகியுள்ளது. பயணத்தடைநீடிக்குமானால், அதற்கு பொதுமக்களே காரணம் என்று, பயணத்தடை நீடிக்கப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இராணுவத் தளபதி பொதுமக்கள்மீது குற்றச்சாட்டு முன்வைத்துவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-ஒ,44,22)

## 20 ரூபாவால்...

தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகரிக்கப்பட்ட புதிய விலைகளின்படி, 92 ஒக்ரைன் பெற்றோல் - 157 ரூபா (20 ரூபாவால் அதிகரிப்பு), 95 ஒக்ரைன் பெற்றோல் (23 ரூபாவால் அதிகரிப்பு) - 184 ரூபா, டீசல் - 111 ரூபா (07 ரூபாவால் அதிகரிப்பு) , சுப்பர் டீசல் - 144 ரூபா (12 ரூபாவால் அதிகரிப்பு) , மண்ணெண்ணெய் - 77 ரூபா (07 ரூபாவால் அதிகரிப்பு) என்று எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பெற்றோலிய கூட்டுத்தாபன சந்தைப்படுத்தல் தலைமைக் காரியாலயம் நேற்றிரவு அறிவித்துள்ளது. எனினும், இந்த விலைகள் அதிகரிப்புத் தொடர்பான ஊடக அறிவிப்பு இதுவரை வெளியாகவில்லை.

இதேவேளை, எரிபொருள்களின் விலைகளை அதிகரிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது. வெகுவிரைவில், அது பற்றிய அறிவிப்பு வெளிவரும் என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக சந்தையில் எரிபொருள் விலை சடுதியாக அதிகரித்த போதிலும், இலங்கையில் 21 மாதங்களாக எவ்வித விலைத்திருத்தமும் மேற்கொள்ளப்படவில்லை. மக்களுக்கான வாழ்க்கைச் சுமை அதிகரித்ததாலும், வருமான வழிமுறைகள் பாதிக்கப்பட்டதாலும் விலை அதிகரிப்புச்சுமையைத் தாங்கினோம். இதனால் அரசுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. தற்போது தாங்கிக்கொள்ள முடியாதளவு சுமை அதிகரித்துள்ளது.

எனவேதான் நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர், எரிபொருள்களின் விலையில் திருத்தம் மேற்கொள்வதற்கு, வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உப குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி விலைத்திருத்தம் தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும். கொரோனா பரவலுக்கு மத்தியில் எரிபொருள் நிலையங்களுக்கு முன்னால் மக்கள் குவிந்தால், அது சிக்கலாக அமைந்துவிடும் என்பதாலேயே திகதி விவரத்தை முன்கூட்டியே அறிவிக்க முடியாமல் உள்ளது. என்றார். இதேவேளை, ராஜபக்சக்களின் ஆட்சிக் காலத்தில் எரிபொருள்களின் விலை அதிகரித்தநிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த-4,44)

## 72 பேருக்கு...

படுத்தப்பட்டன. அதில் 72 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இரவு 221 மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது 21பேருக்கும், நேற்றுப் பகல் 601 பேரின் மாதிரிகள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது 51 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்.பல்கலைக்கழகத்தில் பரிசோதனை நேற்று மேற்கொள்ளப்படவில்லை.

**யாழ்ப்பாணம்**

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேருக்கும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 11பேருக்கும், அளவெட்டி பிரதேச மருத்துவமனையில் 3 பேருக்கும், பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 3 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், காரைநகர் மற்றும் இளவாலை பிரதேச மருத்துவமனைகளில் தலா ஒவ்வொருவருக்கும் என 33 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் ஒருவருக்கும், கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 17 பேருக்கும், ஆனைவிழுந்தான் தனிமைப்படுத்தல் மையத்தில் 12 பேருக்கும் என 30 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**முல்லைத்தீவு**

மாந்தை கிழக்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேருக்கும், வெலிஓயா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் என 3 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

**வவுனியா**

பூவரசங்குளம் பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும், வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், மாவட்ட மருத்துவமனையில் ஒருவருக்கும், பெரியகாடு தனிமைப்படுத்தல் மையத்தில் 2 பேருக்கும் என 5 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மன்னார் மாவட்ட மருத்துவமனையில் ஒருவருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஒ,5)

## 2759...

திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை இரண்டு லட்சத்து 18 ஆயிரத்து 893 ஆக எகிறியுள்ளது. மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 36 ஆயிரத்து 814 அதிகரித்துள்ளது.

இதேவேளை, கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு லட்சத்து 84 ஆயிரத்து 90 ஆக உயர்வடைந்துள்ளது. (த-22)

## கொரோனா...

யாழ்.போதனா மருத்துவமனையில் தற்போது கொரோனா நோயாளர்கள் 80 பேர் சிகிச்சைபெற்று வருகின்றனர். தற்போது குடாநாட்டில் கொவிட் தொற்று சமூக மட்டத்தில் பரவிக் காணப்படலாம். எழுந்தமானமான சமூகமட்ட பரிசோதனைகளிலும் மருத்துவமனைக்கு நோய் நிலையில் வரும் நோயாளிகளிலும் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளின் அடிப்படையிலேயே கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். தற்போது கொவிட் தொற்றால் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களில் 34 வீதமானோர் நீரிழிவு நோயாளர்களாகவும், 20 வீதமானோர் கர்ப்பிணித் தாய்மார்களாகவும், 5 வீதமானோர் சிறு பிள்ளைகளாகவும் உள்ளனர். இவற்றில் 25 வீதமானோருக்கு சுவாசிப்பதற்கு ஒட்சிசன் தேவைப்படுகின்றது. என்றார். (ஐ)

## பனையால்...

பையா (வயது - 56) என்பவரே உயிரிழந்தார். இவர் 3 பிள்ளைகளின் தந்தையாவார்.

அவர், கள் இறக்கவென்று கடந்த 6ஆம் திகதி பனையில் ஏறியிருந்த போது பனைமர மட்டை சறுக்கியதால் கீழே வீழ்ந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. அவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இறப்பு விசாரணகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (த-26)

## விபத்தில்...

காது நேற்று உயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

ஆவரங்கால் மேற்கு புத்தூரைச் சேர்ந்த சுகிரேசன் தயாபாரன் (வயது 52) என்பவரே உயிரிழந்தவராவார். கடந்த 5ஆம் திகதி மானிப்பாயில் இருந்து கைதடி நோக்கி சென்றுகொண்டிருந்தபோது, இராணுவ மோட்டார் சைக்கிளுடன் ஏற்பட்ட விபத்தில் காயமடைந்த அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பயனளிக்காது நேற்று மாலை அவர் உயிரிழந்தார். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். (த-26)

## வீதியால்...

டுக்கோட்டை - மாவடி கண்ணகை அம்மன் கோவிலுக்கு முன்பாக நேற்று மதியம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் பொன்னாலையைச் சேர்ந்த ஒருவரின் தங்கச் சங்கிலியே அறுத்துச் செல்லப்பட்டது.

அவர் தனது நண்பியுடன் வங்கி ஒன்றுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பெண்களுக்கான மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த இருவரில் ஒருவர் மோட்டார் சைக்கிளை இயங்கு நிலையில் வைத்திருக்க மற்றையவர் மாணவியை துவிச்சக்கரவண்டியுடன் தள்ளி வீழ்த்திவிட்டு கழுத்தில் உள்ள சங்கிலியை அறுக்க முற்பட்டுள்ளார். மாணவி கூக்குரலிட்டவாறு நீண்டநேரம் போராடிய போதிலும் எவரும் உதவிக்கு வராத நிலையில் சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டது.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் அந்தப்பகுதி வீடொன்றில் உள்ள கண்காணிப்பு கமரா பதிவுகளின் அடிப்படையில் கொள்ளையர்களைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். (த)

## தமிழகத்துள்...

கொரோனா தடுப்பு நடவடிக்கை காரணமாக விமான போக்குவரத்து ரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில் வெளிநாடுகளுக்கு தப்பிச்செல்வதற்காக அவர்கள் கடல் வழியாக சட்டவிரோதமான முறையில் இந்தியாவுக்கு சென்று மறைந்திருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்கள் மங்களூர் பகுதியில் மறைந்து இருக்கின்றனர் என கியூ பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து ராமநாதபுரம் மற்றும் மதுரை கியூ பிரிவு பொலிஸார் 38 பேரையும் கைது செய்தனர். அவர்கள் கடவுச்சீட்டு இல்லாமல் சட்டவிரோதமாக தமிழகத்துக்குள் நுழைந்தனர் என்று வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

38 பேரில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 31 பேரும் யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் நீர்கொழும்பு பகுதிகளைச் சேர்ந்த தலா ஒருவரும் மட்டக்களப்பு புத்தளம் மாவட்டங்களை சேர்ந்த தலா இருவரும் அடங்குகின்றனர். இவர்கள் முகவர் ஊடாக லட்சம் ரூபா பணத்தைச் செலுத்தி படகு மூலம் இந்தியாவுக்குள் நுழைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இதேபோன்று ஏற்கனவே 27 இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் எதிராக விசாரணைகள் நடத்தப்படவுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடைய ஆளுமையை நிலைநிறுத்த தமிழீழமே வழி

## வைகோ நரேந்திரமோடிக்கு கடிதம்



**கொழும்பு, ஜுன் 12**

**இந்தியாவின் ஆளுமையை நிலை நிறுத்துவதற்கு தமிழீழம் அமைய வேண்டியது அவசியம் என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இந்தியாவின் நம்பிக்கைக்கு உரிய நாடாக இலங்கை இருந்தது இல்லை. அண்டை நாடு என்கின்ற முறையில், இந்தியா இலங்கைக்குக் கூடுதல் முன்னுரிமை வழங்கினாலும் கூட, இக்கட்டான வேளைகளில், இலங்கை, இந்தியாவின் காலை வாரி விடுகின்றது. தாங்கள் ஒரு சீனச் சார்பு நாடு என்பதை, அவர்கள் பலமுறை எடுத்துக்காட்டியுள்ளனர்.

### பறிபோன வளங்கள்

மஹிந்த ராஜபக்சவின் ஆட்சிக்கு இந்தியா மறைமுக ஆதரவு அளித்தது. ஆனால் அவர் ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன், ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் சீன நீர் மூழ்கிக் கப்பல் நுழைய ஒப்புதல் வழங்கினார். இந்தியப் பெருங்கடலில் முதன் முறையாக சீன நீர் மூழ்கிக் கப்பல் நுழைந்தது. அவருக்கு அடுத்து ஆட்சிப் பொறுப்பு ஏற்ற மைத்திரிபால சிறிசேனா மற்றொரு சீன நீர்மூழ்கிக் கப்பலை ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் நுழைய விட்டார். இப்போது, ராஜபக்சவின் ஆட்சியில், இந்தியப் பெருங்கடலில் சீன மயமாக்கல் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. கொழும்பில் ஒரு நிலப்பரப்பை, சீனாவுக்குக் கொடுத்துவிட்டனர். தமிழீழ பகுதிகளில் தீவுகளையும் தாரைவார்த்துள்ளனர்.

### தமிழீழமே வழி

இலங்கை சீனாவின் தளமாக மாறி வருகின்றது. இந்த நிலையில் இந்திய எல்லையை ஒட்டி இருக்கின்ற தமிழீழம் மட்டுமே இந்தியாவின் தளமாக இருக்க முடியும். கடந்த காலங்களில் இலங்கை சீனாவின் பக்கம் சாய்ந்த வேளைகளில் இலங்கையின் ஆட்சித்தலைமையை மாற்றும் அணுகுமுறையை இந்தியா கடைப்பிடித்தது. ஆனால் இனி அந்த அணுகுமுறை வெற்றி பெறாது.

இந்திய கொள்கை வகுப்பாளர்கள் இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த நினைத்தால் தவறாக முடியும். அது சீனா மற்றும் இலங்கை உறவுகளைச் சீர்குலைக்கும். பொருளாதாரம் மற்றும் புவிசார் அடிப்படையில் இலங்கையில் இப்போது சீனாவின் பங்கு உறுதியாக இருக்கின்றது. எனவே தமிழீழத்தைக் காக்கவும் ஈழத்தமிழர்களின் இறையாண்மையை நிலைநாட்டவும் இந்தியா தவறினால் இந்தியப் பெருங்கடலில் ஆளுமையை இழக்க நேரிடும். சீனாவுக்கு இடம் தருவதாக ஆகிவிடும்.

### அமெரிக்கத் தீர்மானம்

அமெரிக்க நாடாளுமன்றில் 117 ஆவது கூட்டத்தொடரின் முதலாவது அமர்வில், நிறைவேற்றப்பட்ட 413 ஆவது தீர்மானம், ஈழத்தமிழர்களின் பிரச்சினைகளை விரிவாகப் பட்டியல் இட்டு, உலக நாடுகள் அவர்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

போர்க்குற்றம் இழைத்தவர்கள் என்று குற்றம் சாட்டப்படுவோரை நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கும், மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைச் செய்தவர்களுக்கு எதிரான சான்றுகளைத் திரட்டுகின்ற முயற்சிகளுக்கும், அரசு தடைகளை ஏற்படுத்துகின்றது.

சட்டத்தைப் புறந்தள்ளி கைதுசெய்கின்றது. வழக்கு ஒழிந்துபோன மிகக் கடுமையான வன்முறையாளர்களை அடக்குகின்ற சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து, பன்னாட்டு நடைமுறைகளுக்கு எதிரான அடக்குமுறைச் சட்டங்களைப் பயன்படுத்துகின்றது என்று தீர்மானத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே உலக வரைபடத்தில் இஸ்ரேல் என்ற நாட்டை யூதர்கள் அமைத்து போல், வங்கதேசம் என்ற நாட்டை இந்தியா அமைத்தது போல், தமிழீழம் என்ற நாட்டை அமைப்பதற்கு, ஐ.நா.மன்றத்தின் மேற்பார்வையில் உலக நாடுகளில் பரவி வாழ்கின்ற ஈழத்தமிழர்களிடம் பொது வாக்குப்பதிவு நடத்துவதற்கான முயற்சிகளை, இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும்- என்றுள்ளது. (எ-4)

# பதவி விலகேன்

*அத்துரலிய ரத்ன தேரர் அறிவிப்பு*

கொழும்பு, ஜுன் 12

நாடாளுமன்ற உறுப்புரிமையை ஒருபோதும் இராஜினாமா செய்யப் போவதில்லை என்று அபே ஜனபல கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அபே ஜனபல கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி தனக்குக் கிடைக்க வேண்டும் என்று பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் காணொளியொன்றின் ஊடாக அறிவித்திருந்தார்.

ஜுன் மாதம் 5 ஆம் திகதியுடன், அத்துரலிய ரத்ன தேரருடைய நாடாளுமன்றப் பதவிக் காலம் நிறைவுபெற வேண்டும். அதன் பின்னர் அந்த உறுப்புரிமை எனக்குக் கிடைக்க வேண்டும். எமக்குள் ஏற்கனவே இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்த அத்துரலிய தேரர், நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து விலகுகிறேன் என நான் எந்தவொரு தரப்புடனும், எந்தவொரு இணக்கப்பாட்டையும் எட்டவில்லை. நாடாளுமன்றப் பதவியை எனது பதவிக்காலம் முழுவதும் தொடர எதிர்பார்த்துள்ளேன். என்றார். (எ-4)

# மக்களுக்காகவே எம்.பி. ஆகின்றேன்

*மனந்திறந்தார் ரணில்*

கொழும்பு,ஜுன் 12

எவர் விமர்சித்தாலும், நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் நான் நாடாளுமன்றம் செல்வதற்கான முடிவை எடுத்துள்ளேன் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது. தனிநபர் பொருளாதாரத்தை வலுப்படுத்து தேசிய பொருளாதாரம் வலுவாகாது. எனவே தீர்க்கப்படாத பல பிரச்சினைகள் உள்ளன. அவற்றைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

கொரோனா நெருக்கடி , பொருளாதாரப்பாதிப்பு, இயற்கை அழிவு மற்றும் கப்பல் விபத்து என்று இலங்கையைச் சூழ பல பிரச்சினைகள் உள்ளன. ஆகவே யாருடைய குறைகளையும் நாம் கூற வேண்டியதில்லை. எனது நாடாளுமன்ற வருகை அவர்களுக்கு தலைப்பு செய்திகளாக இருந்தாலும், நாட்டையும், மக்களையுமே நாம் கருத்தில் கொள்ள வேண்டும். எதிர்க்கட்சி எதைக் கூறினாலும் இறுதியில் மக்கள் தீர்மானிப்பர்.- என்றார். (4)

# தனி வழியில் தேரர்கள் கட்சி அமைக்க முனைப்பு

*தெற்கு அரசியலில் பரபரப்பு*

கொழும்பு,ஜுன் 12

தற்போதைய அரசை, உருவாக்க முன்நின்று பாடுபட்ட, பௌத்த தேரர்கள் புதிய கட்சி ஒன்றை ஆரம்பிப்பதற்கான முதற்கட்டப் பணிகளை ஆரம்பித்துள்ளனர் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. நாரஹேன்பிட்டி அபயராமய விகாரையில் புதுக்கட்சியை ஆரம்பிப்பதற்கான பேச்சுக்கள் நடத்தப்பட்டுள்ளன என்று அறியமுடிகின்றது. தற்போதைய அரசுமீது கடும் அதிருப்தி வெளியிட்டுள்ள பௌத்த தேரர்கள், மாற்றுவழியொன்றை உருவாக்குவது தொடர்பில் ஆராய்ந்துள்ளனர். அபயராமய விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் மற்றும் ஓமல்பே சோபித தேரர் ஆகியோர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இதற்கு உறுதுணையாகவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-4)



# பஸில் ராஜபக்சவே பலமான தலைவர்

*புகழ்பாடும் பெரமுன உறுப்பினர்*

கொழும்பு, ஜுன் 12

நாட்டில் இன்று நாம் வெற்றியைப் பதிவு செய்வதற்கு பஸில் ராஜபக்சவே காரணமானவர். அவர் குறுகிய காலத்தில் சிறிலங்கா பொதுஜன முன்னணியை அமைத்து, பலம் வாய்ந்த ஒரு தலைவராகத் திகழ்கின்றார். இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சரும், சிறிலங்கா பொதுஜன முன்னணியின் முக்கியஸ்தருமான பியல் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியை நியமித்தமை, முதிர்ச்சியடைந்த பிரதமர் மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பதவிக்கு அமர்த்தியமை மற்றும் எம்மைப் போன்று புதியவர்கள் முன்நோக்கி வர தலைமைத்துவம் வகித்தவர் பஸில் ராஜபக்ச. அவர் நாளை இந்த நாட்டின் தலைவராக வருவாராயின், இரண்டு கைகளையும் உயர்த்த நாங்கள் தயார். அதேவேளை நாமல் ராஜபக்ச பிரதமர் பதவிக்குப் பொருத்தமானவர். எனினும் எதிர்காலத்தில் இடம்பெறக்கூடிய விடயங்கள் பற்றி இன்னும் தீர்மானிக்கவில்லை- என்றார். இதேவேளை பிரதமர் மஹிந்த ராஜபக்ச எதிர்வரும் 2022 ஆம் ஆண்டில் தனது பதவியை, நாமல் ராஜபக்சவுக்கு வழங்கவுள்ளார் என்று தென்னிலங்கையில் பரபரப்பு தகவல்கள் வெளியாகி வருகின்றன. (எ-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12. 06.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.